Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, MARCH 28, 2022

திங்கட்கிழமை மார்ச் 28, 2022 | ஒளி: 07 கதிர்: 267 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

## பழையன புகுந்தன

■ ரஞ்சித் ராஜபக்ஷ



நாடளாவிய ரீதியில், மின்வெட்டு அமல்படுத்தப்படும் நிலையில், பழைய பொருட்கள் மீண்டும் பாவனைக்கு வந்துள்ளன. பழைய சிமினி விளக்கு, சிரட்டைக் கரியால் பயன்படுத்தப்படும் ஸ்திரிப் பெட்டி (ஐயன்பொக்ஸ்) ஆகியனவே சந்தைக்கு வந்துள்ளன.

தொடர்ச்சி P2

### தேசிய வளங்களை இழந்து நிற்கும்

# “பிச்சை நாடு”



**எமது சொந்த நலன்களுக்காக வளங்களையோ நிதியையோ சேகரிக்க வேண்டிய அவசியமில்லை**

தற்போது அரச வளங்கள் அழிக்கப்படுவதாகத் தெரிவித்த தேசிய மக்கள் சக்தி கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க, நாடு தேசிய வளங்களை இழந்து, சர்வதேச சமூகத்திடம் பிச்சை எடுக்கும் நாடாக மாறியுள்ளதாகவும் தெரிவித்தார்.

களனி பல்கலைக்கழகத்தில் நேற்று (27) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஆளுநர் கப்ரால் மற்றும் ஆட்டிகலவுக்கு அழைப்பு



இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல ஆகியோரை அரச நிதி தொடர்பான பாராளுமன்ற குழுவில் எதிர்வரும் முதலாம் திகதி ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து ஆராய்வதற்காக இலங்கை மத்திய

தொடர்ச்சி P2

## இ.தொ.காவுக்கு புதனன்று புதிய தலைவர்

■ ஆ.ரமேஸ்.



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அமரர் ஆறுமுகம் தொண்டமானின் மறைவுக்கு பின்னர் கட்சியின் புதிய தலைவரை தெரிவு செய்வதற்காக, காங்கிரஸின் தேசிய சபை, எதிர்வரும் புதன்கிழமை (30) கூடவுள்ளது.

தொடர்ச்சி P2

## “நான் தயார்; நீங்கள் தயாரா?”

**மைத்திரிக்கு நாமல் சவால்**



முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்றால் எனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்யவும் தயார் என, இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஹொரணை றோயல் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு, ஊடகவியலாளர்கள்

தொடர்ச்சி P2

## நீர் மின் உற்பத்தி 20 நாள்களே நீடிக்கும்

நீர்த்தேக்கங்களில் உள்ள நீரைக் கொண்டு இன்னும் 20 நாள்களுக்கு மாத்திரமே நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடும் வரட்சி காரணமாக மின் உற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 28 சதவீதத்தை விடக் குறைவடைந்துள்ளதாகவும் இலங்கை மின்சார சபை தரவுகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2



## 132 கடத்தல்காரர்களுக்கு சிவப்பு அறிவித்தல்



நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ள 132 போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு இன்டர்போல் மூலம் சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன, அவர்களில் பெரும்பாலானோர் ஐக்கிய அரபு அமீரகத்தில் தலைமறைவாகியுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




இரத்மலானை சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக, சர்வதேச விமான சேவைகள் நேற்று (27) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 55 வருடங்களுக்குப் பின்னர், அந்த விமான நிலையத்தில் இருந்து சர்வதேச சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மாலைத்தீவிலிருந்து வருகை தந்த விமானமொன்று நேற்று (27) காலை 08:47க்கு தரையிறங்கியது. தீயணைப்பு வாகனங்கள் இரண்டு, தண்ணீரை பீச்சியடித்து முதலாவது விமானத்தை வரவேற்றன.

### நாட்டின் நெருக்கடி சூழலில்

## அரசியல் பொறி வைக்க முயலும் தமிழ் ‘டயஸ்போறா’



நாட்டில் நிலவும் நெருக்கடியான சூழ்நிலைக்கு மத்தியில் ஆபத்தான அரசியல் பொறியை வைக்க புலம்பெயர் தமிழர்கள் (தமிழ் டயஸ்போறா) முயன்று வருவதாக தேசிய சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ‘பிம்ஸ்டெக்’ மாநாடு இன்று ஆரம்பம்

பல்துறை தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்முயற்சி (பிம்ஸ்டெக்) மாநாடு, கொழும்பில் இன்று (28) ஆரம்பமாகவுள்ளதுடன், இந்த மாநாடு, மார்ச் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம், தாய்லாந்து

தொடர்ச்சி P2

BIMSTEC

### நாணய நிதிய விவகாரம்:

## ரணில் கேட்டதை கொடுத்தார் ஜோன்



சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான ஆக்கம் 4 அறிக்கை தொடர்பில் பாராளுமன்றத்தில் உடனடியாக விவாதம் நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார். சபாநாயகர் மஹிந்த யாப்பா

தொடர்ச்சி P2

## பயணம் முடியும்வரை பொறுமை காக்கவும்

**அம்பலப்படுத்த வேண்டாம் என்கிறார் அஜித்**

**வீடுகளில் யாரும் இல்லாததை குற்றவாளிகள் அறிந்திடுவர்**

விடுமுறை காலத்தில் மேற்கொள்ளும் பயணங்கள் குறித்து, சமூக ஊடகங்களில் புதுப்பிப்பதைத் தவிர்க்குமாறு எச்சரித்த சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன, பயணம் முடியும் வரை பொறுமையாக இருக்குமாறு பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## ஓமான் வழங்கிய எரிவாயு இறங்கியது



ஓமான் அரசாங்கத்தால் இலங்கைக்கு கடனுதவியாக வழங்கப்பட்ட 3,500 மெற்றிக் தொன் எரிவாயு, நேற்று (27) பிற்பகல் கப்பலிலிருந்து தரையிறக்கப்பட்டதாக லிட்ரோ காஸ் நிறுவனத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

லிட்ரோ நிறுவனத்திடம் போதியளவு எரிவாயு கையிருப்பு இருப்பதால், நாளொன்றுக்கு 100,000 சிலிண்டர்கள் வீதம் எதிர்வரும் நாள்களில் தொடர்ந்து எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு வழங்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கெரவலப்பிட்டி எரிவாயு முனையத்தில் உற்பத்தி, நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் சாதாரணமாக இல்லாவிட்டாலும், பிற்பகலுக்குள் சுமார் 100,000 எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### தமிழகத்துக்கு வரும்

## இலங்கை தமிழ் அகதிகளுக்கு உதவுங்கள்

**ஸ்டாலினிடம் செல்வம் எம்.பி கோரிக்கை**

■ க. அகரன்



இலங்கையில் வாழ முடியாதென்று இந்தியா செல்லும் தமிழ் அகதிகளுக்கு உதவுமாறு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கொக்கரக்கோ... கோ... கோ...!

அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கு என்னென்ன தில்லாலங்கடி ஆட்டமெல்லாம் ஆடவேண்டுமோ, ஆடித்தான் ஆகவேண்டும்.

இதில் குடும்ப ஆட்சியென்றால் அப்பப்பா, சொல்லவா வேணும், எப்படியெல்லாம் காவடி எடுக்கவேண்டுமோ எடுத்தே ஆகவேண்டும்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில், குடும்ப ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்போமென, பங்காளிகள் சிலரே பந்தமெடுத்துவிட்டனர். குடும்பத்தில் கூடுதலாக அங்கத்தவர்கள் இருந்தால், பிரித்துப்போட்டு மேய்ந்துவிடலாம்.

இரண்டொருவர் இருந்தால், அவர்களையும் அரசியலுக்கு நைசாக இழுக்கவே வேண்டும். சிலர் தாக்குப்பிடிப்பர், இன்னும் சிலர் சூறாவளியில் சிக்கிக்கொண்டதைப் போல எடுத்த எடுப்பிலேயே காணாமற் போய்விடுவர்.

மறுபடியும் முதலில் இருந்தா? என முயற்சிப்போரும் உளர். கப்சிப்பென தானுண்டு, தன் வேலை உண்டென, ஒதுங்குவோரும் உள்ளனர்.

இப்படிதான், மற்றுமொரு கட்சியும், தன் குடும்ப பரம்பரையே ஆளவேண்டுமென நினைத்து வேல் எடுத்துள்ளதாம். சேவல் கூவினால்தான் பொழுதுவிடியும். கொக்கரக்கோ சேவல் ஒன்று என்ன சொல்லி கூவுது என்பதெல்லாம் புதனன்று விடிந்தாற்றான் தெரியும்.

மணியாட்டி

PAGE 1 தொடர்ச்சிகள்

# “பிச்சை நாடு”

துறைமுகங்கள், அனல்மின் நிலையங்கள், எண்ணெய்த் தாங்கிகள், கரையோரங்கள், தோட்டங்கள் உள்ளிட்ட அரச வளங்கள் வெளிநாடுகளுக்குச் சொந்தமாக இருந்தால் நாடு இருக்குமா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். பருப்பு, எண்ணெய் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களைப் பெற இந்தியா மற்றும் சீனாவிடம் இருந்து தலா 1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கோரப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

பங்களாதேஷிடம் இருந்து 250 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்ற அரசாங்கம், கடனைத் தீர்ப்பதற்கு மேலதிக அவகாசம் கோரியதுடன், சிமெந்து மற்றும் இரும்பு பெறுவதற்கு பாகிஸ்தானிடம் இருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாபெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

பால்மா மற்றும் கோதுமைமா இறக்குமதிக்காக அவுஸ்திரேலியாவிடம் இருந்து 300 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் கோரியுள்ள அரசாங்கம், உக்ரைன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு மத்தியில் எரிபொருள் மற்றும் எரிவாயுவைப் பெறுவதற்கு ரஷ்யாவிடமிருந்தும் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப் பெற்றதாக சுட்டிக்காட்டினார்.

நாட்டை மேம்படுத்துவதற்கு தேவையான வேலைத்திட்டத்துக்கு முன்னுதாரணமாக செயற்படுவதற்கு தேசிய மக்கள் தயாராகவுள்ளதாகவும் தமது சொந்த நலன்களுக்காக வளங்களையோ நிதியையோ சேகரிக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் அனுமதிகள் இரத்து செய்யப்படும் அதேவேளை அமைச்சர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லம் வழங்கப்படாது என்றும் குறிப்பிட்டார்.

# ‘நான் தயார்:நீங்கள் தயாரா?’

எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே விளையாட்டுத்துறை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரசாங்கத்தின் அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைக்க முன்வந்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு கிடைத்துள்ள அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்வதன் மூலம் முன்னுதாரணமாக இருக்க முடியும்” என்றும் அவர் கூறினார்.

“ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து அவர்களால் முன்மாதிரியாக இருக்க முடிந்தால், நான் அவர்களுடன் சேர்ந்து எனது பதவியை இராஜினாமா செய்யவும் தயாராக இருக்கிறேன். எனக்கு எந்த

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவையை குறைக்கும் யோசனையையும் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

பிரச்சனையும் இல்லை” என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில், கடந்த புதன்கிழமை (23) இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் புதிய வரவுசெலவுத் திட்டம் தொடர்பில் கலந்துரையாடிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவையை குறைக்கும் யோசனையையும் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பயணம் முடியும்வரை பொறுமை காக்கவும்

விடுமுறையில் செல்லும் நபர்கள், சமூக ஊடகங்களில் தகவல்களை வெளியிடுவதால் அதைப் பயன்படுத்தி, மோசடி செய்பவர்கள் அதை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வர் எனவும் எச்சரித்தார்.

வீடுகளில் யாரும் இல்லாததை இதன்மூலம் அறிந்துகொள்ளும் குற்றவாளிகள், வீடுகளை உடைக்க பார்க்கிறார்கள் என்றும் அவர் விளக்கியதுடன், எனவே தமது பயணங்கள் முடியும் வரை பொறுமையாக இருக்குமாறு வலியுறுத்தினார்.

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு போதைப்பொருள் சோதனைகள் அதிகரிப்பட்டுள்ளதாகத் தெரிவி அவர், போதைப்பொருள் வர்த்தகம் குறித்த மதிப்புமிக்க தகவல்களை வழங்குபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# இலங்கையின் தமிழ் அகதிகளுக்கு உதவுங்கள்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், “இலங்கையில் வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாகவே மக்களுடைய தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது.

பிள்ளைகளுக்கு சரியான முறையில் உணவு கொடுக்க முடியவில்லை. அவ்வாறான ஒரு பிரச்சினை இலங்கை நாட்டிலே தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

ஒவ்வொரு நிமிடமும் உணவு பொருட்களின் விலை மிக உயர்வடைவதனால் அன்றாடம் உழைக்கின்றவர்கள் பட்டினியை எதிர் கொள்கின்ற நிலை உருவாகி இருக்கின்றது. அதனால் இந்தியா செல்கின்ற ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்றது. அது தவிர்க்க முடியாதது என்றே கூறுகின்றேன். ஏனென்றால் குழந்தைகளுக்கு உணவு கொடுக்கவில்லை என்றால் தாய், தந்தை அடுத்த கட்டம் என்ன செய்வது என்று தான் யோசிப்பார்கள்.

ஆகவே இலங்கையில் பட்டினியால் இறப்பதை விட இந்தியா செல்வது சட்டவிரோத செயற்பாடாக இருந்தாலும் கூட, அவ்வாறான ஒரு செயற்பாட்டை மக்கள் செய்வது அந்த காரணங்களை வைத்துக் கொண்டு தான்.

எனவே இந்திய அரசாங்கம் அங்கே வருபவர்களை முகாம்களில் விட்டிருப்பதாக அறிகின்றேன். அந்தவகையில் முதலமைச்சருக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

இலங்கையில் வாழமுடியாதென்று இந்தியா வரும் உறவுகளை நீதிமன்றத்தினை அணுக வைத்து சிறப்பு முகாம்களில் அடைக்காது, மக்கள் தங்கியிருக்கின்ற முகாம்களில் தங்க வைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் நான் முதலமைச்சரிடம் முன் வைக்கின்றேன்“ என்றார்.

# பழையன புகுந்தன

சிமிலி விளக்கொன்று 1,500 ரூபாய்க்கும், பழைய ஸ்திரி பெட்டி 900 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இவ்விரண்டு பொருட்களுக்குமான கேள்வி அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ள ஹட்டன் வர்த்தகர்கள், விரைவாக விற்றுத் தீர்க்கப்படுகின்றது என்றும் தெரிவித்துள்ளனர்.

முழு உலகமும் தொழிற்நுட்ப ரீதியில் முன்னோக்கி நகரந்துகொண்டிருக்கும் நிலையில், இலங்கை, சுமார் 50 வருடங்களுக்கு பின்னோக்கிச் சென்றுள்ளது என கொள்வனவு செய்யும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

# பிம்ஸ்டெக் மாநாடு இன்று ஆரம்பம்

ஆகிய நாடுகளின் சிரேஷ்ட அதிகாரிகளும் வெளிவிவகார அமைச்சர்களும் பங்கேற்கவுள்ளனர்.

மியன்மாரின் வெளிவிவகார அமைச்சர் இந்த மாநாட்டில் இணைய வழியாக பங்கேற்கவுள்ளார். மாநாட்டின் இறுதி நாளான 30ஆம் திகதி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமை தாங்கவுள்ளார்.

உச்சி மாநாடு மற்றும் தொடர்ச்சியான கூட்டங்களின் போது, பிராந்திய குழுவாக பிம்ஸ்டெக் அடைந்துள்ள முன்னேற்றங்கள் குறித்து பிரதிநிதிகள் கலந்துரையாடவுள்ளனர்.

இந்த மாநாட்டின் போது பிம்ஸ்டெக் சாசனம் ஏற்கப்பட்டு, பல்வேறு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஓமான் வழங்கிய எரிவாயு இறங்கியது

எரிவாயுவைத் தொடர்ந்து விநியோகம் செய்வதன் மூலம் இந்த சர்ச்சையை விரைவில் முடிவுக்கு கொண்டு வர லிட்ரோ திட்டமிட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# ரணில் கேட்டதை கொடுத்தார் ஜோன்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் சபைத் தலைவர் தினேஷ் குணவர்தன ஆகியோரிடமே முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார் என்று தெரியவந்துள்ளது.

அறிக்கை தொடர்பில் அரசாங்கம் தமது திட்டத்தை முன்வைப்பது மிகவும் முக்கியமானது என அவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிதி உதவி பெறுவதற்கு அரசாங்கம் தெரிவு செய்திருப்பதால், இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வாரம் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டிலும் நாணய நிதியத்தின் அறிக்கை குறித்து நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் வினவிய ரணில் எம்.பி, அதை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள கோரிக்கைக்கு பதிலளித்துள்ள அரசாங்கத்தின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை தொடர்பில், ஏப்ரல் முதல் வாரம் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றார்.

பாராளுமன்றம் ஏப்ரல் 2ஆம் வாரம் 6ஆம் திகதியன்று மீண்டும் கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீர் மின் உற்பத்தி 20 நாட்களே நீடிக்கும்

கொத்மலை நீர்த்தேக்கத்தில் 21%, காசல்ரீ நீர்த்தேக்கத்தில் 12%, மவுஸ்ஸாகலை நீர்த்தேக்கத்தில் 29%, சமனல நீர்த்தேக்கத்தில் 14% மற்றும் ரந்தெனிகல நீர்த்தேக்கத்தில் 56% என்ற சதவீதத்தில் நீர்மட்டம் குறைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் மின்சார உற்பத்தியில் 80 சதவீதமானவை நீரின் மூலம் பெறப்பட்டிருந்த நிலையில், தற்போது அது சுமார் 20 சதவீதமாக குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் பொறி வைக்க முயலும் தமிழ் டயஸ்போறா

நேற்று (27) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் மேற்குறிப்பிட்ட விடயத்தை குறிப்பிட்டார்.

இலங்கையை இவ்வாறான செயற்பாடுகளுக்கு காட்டிக் கொடுப்பதை தவிர்க்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம், அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த காலங்களிலும் நாட்டை பிளவுபடுத்துவதற்கு புலம்பெயர் தமிழ் மக்களால் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் சமரவீர எம்.பி குறிப்பிட்டார்.


புலம்பெயர்ந்த தமிழர்களின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில், நிலவும் நெருக்கடிகளுக்கு மத்தியில் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதனையே செய்ய முயல்வதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஆளுநர் கப்ரால் மற்றும் ஆட்டிகலவுக்கு அழைப்பு

வங்கியின் ஆளுநர் உட்பட குழுவினரை, அரச நிதி தொடர்பான பாராளுமன்ற குழுவில் கடந்த 24ஆம் திகதி நித ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் அவர்கள் பங்கேற்கவில்லை.

நிதிக் குழுவுக்கு சமுகமளிக்காமை குறித்து, அக்குழுவின் தலைவரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அநுர பிரியதர்சன யாப்பா அதிருப்தி தெரிவித்திருந்ததுடன், இவ்வாறான செயற்பாடு பாராளுமன்றத்தை அவமதிக்கும் செயலாகும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித்



நிவாட் கப்ராலிடம் வினவிய போது, தானும் தனது அதிகாரிகளும் எதிர்வரும் முதலாம் திகதி அரச நிதி தொடர்பான பாராளுமன்ற குழுவில் முன்னிலையாகவுள்ளதாக தெரிவித்தார்.

நாணயச் சபை உறுப்பினர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல ஆகியோர் கடந்த 24 ஆம் திகதியன்று, உலக வங்கி அதிகாரிகளுடனான அவசர கலந்துரையாடல் காரணமாக பாராளுமன்றக் குழுவில் கலந்து கொள்ள முடியவில்லை என்றும் இது குறித்து குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

குழு கூட்டத்துக்கு அழைக்கப்பட்டவர்கள், பாராளுமன்றத்தை அவமதிக்கும் நோக்கத்தில் கலந்து கொள்ளாமல் விடவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

# 132 கடத்தல்காரர்களுக்கு சிவப்பு அறிவித்தல்

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து கடந்த வருடம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது 95,000 சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில், 1,630 கிலோகிராம் ஹெராயின், 15,000 கிலோகிராம் கஞ்சா மற்றும் சுமார் 377 கிலோ கிராம் செயற்கை போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவித்தார்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சுமார் 800 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த ஆண்டு 360 கிலோ கிராம் ஹெராயின் மற்றும் 2100 கிலோ கிராம் கஞ்சா ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, நாட்டை விட்டு வெளியேறியவர்களுக்கு எதிராக பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மேலும் குறிப்பிட்டார்.

# இ.தொ.காவுக்கு புதனன்று புதிய தலைவர்

ஆறுமுகன் தொண்டமானின் மறைவுக்குப் பின்னர் கூடிய தேசிய சபை மற்றும் மேல்மட்டக் குழு, காங்கிரஸின் பொதுச் செயலாளராக ஜீவன் குமாரவேல் தொண்டமானை தெரிவுச் செய்திருந்தது. நிர்வாகத்தை முன்னெடுத்துச்செல்ல ஆறுமுகன் தொண்டமானின் புதல்வி விஜயலட்சுமி தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

காங்கிரஸின் நிதி காரியதரிசியாக, ஆறுமுகன் தொண்டமான் காலத்தில் இருந்தே பதவி வகித்து வந்த, மருதுபாண்டி ராமேஸ்வரன் எம்.பி., தொடர்ந்தும் அப்பதவியை வகித்து வருகின்றார்.

எனினும், காங்கிரஸின் தலைவர் பதவி தொடர்ந்தும் வெற்றிடமாகவே உள்ளது. இதனால் பல்வேறு விமர்சனங்களும் எழுப்பட்டிருந்தது.

ஆறுமுகம் தொண்டமான் மறைந்து, இரண்டு வருடங்களை எட்டவுள்ள நிலையில் காங்கிரஸின் தலைவர் பதவிக்கு ஒருவரை தேர்ந்தெடுக்க தற்போது முடிவுகள் செய்யப்பட்டுள்ளன.

காங்கிரஸின் மகளிர் தின நிகழ்வின் ஒரு நிகழ்வாக நுவரெலியாவில் நடைபெற்ற நிகழ்வில், உரையாற்றிய காங்கிரஸின்

எனவே இதற்கான தீர்வு எதிர்வரும் புதன்கிழமை மாலை தெரிந்து விடும் என்ற எதிர்பார்ப்பு தற்போது பேசும் பொருளாக மாற்றம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன், “காங்கிரஸில் புதிய மாற்றங்கள் விரைவில் நிகழும்” என கூறியிருந்தார்.

அந்தவகையிலேயே, காங்கிரஸின் தேசிய சபையை, கொட்டக்கலையில் எதிர்வரும் 30ஆம் திகதியன்று கூட்டுவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

புதிய தலைவர் பதவிக்கு, காங்கிரஸின் உயர்மட்ட குழுவில் அங்கம் வகிக்கும் உப- தலைவர்கள் சிலரும், நிதி காரியதரிசியான எம். ராமேஸ்வரன், மற்றும் உப- தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோரும் போட்டியுள்ளனர் என காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே இதற்கான தீர்வு எதிர்வரும் புதன்கிழமை மாலை தெரிந்து விடும் என்ற எதிர்பார்ப்பு தற்போது பேசும் பொருளாக மாற்றம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

# “அரசாங்கத்தின் பிணையாளி”

கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை பிணை எடுக்க தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தயாராகிவிட்டதாக வலிந்து காணாமலாக்கப்பட்ட ஈழத் தமிழர்களின் உறவினர்கள் அமைப்பின் பணிப்பாளர் கருணாவதி பத்மநாதன் தெரிவித்துள்ளார்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனான பேச்சுவார்த்தைக்குப் பின்னர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி தெரிவித்த கருத்துகள் இதையே வெளிப்படுத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; தமிழ் மக்களுக்கென பிரத்தியேகமாக அரசியல் பிரச்சினை ஒன்றோ, அல்லது அன்றாடப் பிரச்சினைகளோ இருப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை எனவும் தெரிவித்தார்.

தான் தனி சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் என்பதையே ஜனாதிபதி தொடர்ந்து வலியுறுத்தி வந்ததாகவும், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகளான காணி அபகரிப்பு, மீள்குடியேற்றம், அரசியல் கைதிகள் விவகாரம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் உள்ளிட்ட விடயங்களிள் சர்வதேசத்துக்கு வாக்குறுதிகளைக் கொடுத்திருந்தும் கூட, எந்தவிதமான நகர்வையும் முன்னெடுக்க அரசாங்கம் அக்கறை காட்டவில்லை எனவும் அந்த அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

மிருசுவிலில் தமிழ் மக்களைப் படுகொலை செய்தமைக்காக மரண தண்டனைக்குள்ளான இராணுவ அதிகாரிக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியிருந்தார். அரசாங்கம் எவ்வாறான நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அணுகும் என்பதற்கு இவை இரண்டும் மட்டுமல்ல மேலும் பல உதாரணங்கள் உள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கிளர்ச்சியொன்று வெடிக்கலாம் என்பதால், இப்பின்னணியில் அமெரிக்க உள்ளிட்ட மேற்குலக நாடுகள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேச வேண்டும் என வலியுறுத்துகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், இரண்டரை வருடங்களாக கூட்டமைப்புடன் பேச்சை தவிர்த்து வந்த ஜனாதிபதி அவசரமாக அவர்களைப் பேச்சுக்கு அழைத்தார். கூட்டமைப்பும் எந்த நிபந்தனைகளும் இன்றி பேச்சுக்கு சென்றிருக்கின்றது.

இது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அவசியமாகவுள்ள மேற்கு நாடுகளின் உதவியைப் பெறுவதற்காக கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் போடும் நாடகத்துக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் துணைபோகின்றதா என்ற கேள்வியைத்தான் எழுப்புகின்றது என்றார்.

## “எதிர்ப்போருடன் இணையத் தயார்”



ராஜபக்ஷர்களுக்கு எதிராகச் செயற்படக்கூடிய எந்தவோர் அரசியல் கட்சிகளுடனும் செயற்படத் தயாரென 43ஆவது படையணின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க அறிவிப்பு விடுத்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் உள்ளவர்கள் அல்லது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என ராஜபக்ஷர்களை எதிர்க்கும் எவருடனும் இணைந்து செயற்படத் தயார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது ஆட்சியில் உள்ளவர்களை வெளியேற்றுவதற்குப் பாரிய கூட்டணி ஒன்றை அமைப்பது காலத்தின் தேவை. அந்தக் கூட்டணிக்காக, நாம் எந்தவொரு கட்சியுடனும் இணைந்து செயற்படத் தயாராக இருக்கிறோம் என்றார்.

ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன, எங்களின் அழைப்பை ஏற்று, 43ஆவது படையணி மாநாட்டில் கலந்துகொண்டிருந்தார். இதனாலேயே கடந்த வெள்ளிக்கிழமை ஐ.தே.க.வால் ஏற்பாடு செய்யப்பட்ட சத்தியாகிரகத்தில் கலந்துகொள்ளத் தீர்மானித்துள்ளோம். மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகிய கட்சிகளின் ஆர்ப்பாட்டங்களிலும் எதிர்காலத்தில் நாம் கலந்துகொள்வோம் என்றார்.

## “தண்ணீர் கொடுங்கள்”

நாட்டில் அதிகமான வெப்பம் நிலவி வருவதால், குழந்தைகளை அதிகளவான நேரம் தண்ணீரில் விளையாட விட வேண்டுமென தெரிவிக்கும் விசேட வைத்திய நிபுணர் தீபால பெரேரா, அதிகளவான நீரை குழந்தைகளுக்கு அருந்துவதற்கு வழங்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.



பல்வேறு நோய் அறிகுறிகளுடன் வைத்தியசாலைகளுக்கு பிள்ளைகள் வருகிறார்கள். இவ்வாறு வரும் பலர் தங்களுக்கு அதிகம் வியர்ப்பதாகவும், உடல் வலி, சோர்வு உள்ளிட்ட பல காரணங்களை வைத்தியர்களிடம் கூறுகிறார்கள் என்றார்.

சில குழந்தைகள் எந்தவிதமான காரணங்களும் இல்லாம் தொடர்ந்து அழுகின்றனர் எனப் பெற்றோர்கள் வைத்தியர்களிடம் கூறுவதாகவும் தெரிவித்தார்.

குறிப்பாக, தடிமன், காய்ச்சல் என எது இருந்தாலும் குழந்தைகளை குளிப்பாட்டுவதைத் தவிர்க்க வேண்டாம் எனவும் அவர் இதன்போது பெற்றோர்களுக்கு அறிவுறுத்தினார்.

காலையிலும் மாலையிலும் சுமார் 20 நிமிடங்கள் குழந்தைகளை தண்ணீரில் விளையாட விட வேண்டும் என்றார்.

மின்துண்டிப்பு விவகாரம்

## “தடைகளை நீக்கவும்”



மின்சார நெருக்கடிக்கு தீர்வாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை பயன்படுத்துவதில் உள்ள தடைகளை உடனடியாக நீக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்டவுக்குப் பணிப்புரைவிடுத்துள்ளார்.

அலரி மாளிகையில் அண்மையில் நடைபெற்ற பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தற்போதைய மின் நெருக்கடிக்கு உடனடி தீர்வு காணப்பட வேண்டும் எனவும், மின்சார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தடையில்லா மின்சாரம் விரைவில் வழங்கப்பட வேண்டும் எனவும் பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

இலங்கையின் 22 மில்லியன் சனத்தொகையில் சுமார் 6 மில்லியன் மக்கள் சமுர்த்தி சலுகைகளைப் பெறுகின்றனர். இதற்காக மாதாந்தம் சுமார் 62 மில்லியன் ரூபாய் செலவிடப்படுவதாக இக்கூட்டத்தில் தெரியவந்துள்ளது.

சமுர்த்தி பெற வேண்டியவர்களுக்கு உண்மையில் சலுகைகள் கிடைக்கவில்லை எனவும் தேவையில்லாதவர்கள் சமுர்த்தி பெறுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.





## சுற்றுலா விடுதியில்...

பெந்தோட்டையில் உள்ள சுற்றுலா விடுதியொன்றில் பாரியளவிலான மண்ணெண்ணை தீப்பந்தங்கள் பற்ற வைக்கப்பட்டுள்ளன. மின்துண்டிப்பை அடுத்தே, இவ்வாறு தீப்பந்தங்கள் பற்றவைக்கப்பட்டுள்ளன.

(படங்கள்: துசித குமார டி சில்வா)

## “இணைந்திருப்பதே ஆத்ம திருப்தி”

ரஸீன் ரஸ்மின்

பொருளாதார நெருக்கடியிலிருந்து எமது நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதை விட்டு விட்டு, இதை வைத்து அரசியல் செய்வதை கட்சித் தலைவர்கள் கைவிட வேண்டும் என புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் தெரிவித்தார்.

கற்பிட்டி, நுரைச்சோலையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதங்களை அனுபவிப்பதற்காக, புத்தளம் மாவட்ட மக்கள் பாராளுமன்றத்துக்கு என்னை அனுப்பவில்லை என்றார்.

எனது கட்சியை விட மக்களின் அபிலாஷைகளே எனக்கு முக்கியம் எனக் கருதி, எனது



மாவட்ட மக்களின் அங்கிகாரத்தோடு அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கி வருகின்றேன். புத்தளத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தும் வருகின்றேன்.

அரசாங்கத்தோடு இணைந்து மக்களுக்குப் பணியாற்றுவது ஆத்ம திருப்தியைத் தருவதாகவும், தற்போதைய நிலையில் இது அரசியல் செய்யும் காலமல்ல என்றார்.

## இன்று வருகிறார் கலாநிதி ஜெய்சங்கர்



இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் இலங்கைக்கு இன்று (28) விஜயம் செய்யவுள்ளார். அவர், எதிர்வரும் 30ஆம் திகதி வரை தங்கியிருப்பார்.

கொழும்பில் நடைபெறவுள்ள, BIMSTEC மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அவர் வருகை தரவுள்ளார்.

இதன்போது, BIMSTEC மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ள இலங்கை அதிகாரிகளையும் அவர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் Wang Yi-இன் அவசர இந்திய விஜயம் இடம்பெற்று சில நாள்களின் பின்னர் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் இங்கு வருகை தருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## காயத்திரிக்கு பாராட்டுச் சான்றிதழ்...

கொழும்பு மாநகரசபை உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்கவுக்கு தமிழக சுற்றாத்துறை தொழிலதிபர் வி.கே.டி. பாலன், பாராட்டுச் சான்றிதழை வழங்கினார்.



இலங்கை சின்மயா மிஷன் அமைந்துள்ள 10ஆவது ஒழுங்கையை ‘சின்மயா ஒழுங்கை’ எனப் பெயர் மாற்றம் நடவடிக்கை எடுத்தமை, அவரது சமூகப் பணிகள், செயற்றிட்டங்கள், பொரளை கனத்தை ‘இந்து மயானம்’ மீள புனரமைத்தல் ஆகியவற்றை பாராட்டிக் கௌரவிக்கும் வகையில் இச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

ஒண்டாரியோ மாகாணத்தின் அமைச்சரும் ஸ்காபுறோ வடக்கு தொகுதி மக்கள் பிரதிநிதியும் தமிழர்களின் நெருங்கிய நண்பருமான றேமட்சோ, வழங்கிய பாராட்டுச் சான்றிதழை சென்னையில் நடைபெற்ற ‘பகிர்வோம் பாராட்டுவோம்’ நிகழ்வில் கனடா உதயன் நிறுவனத்தின் ஸ்தாபகர் ஆர்.என். லோகேந்திர லிங்கம் முன்னிலையில் வழங்கப்பட்டது.

## கொஹுவல மேம்பாலத்தில் 46 சதவீத பணிகள் பூர்த்தி

கொழும்பு நகரில் நிலவும் கடும் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வு காணும் வகையில், ஹங்கேரி நாட்டு நிதியுதவியில் இந்த கொஹுவல மேம்பாலம் நிர்மாணிக்கப்படவுள்ளது.



ஆளும் தரப்பு பிரதம கொரடா நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன், ஹங்கேரிய வர்த்தக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீட்டர் சியாட்டோ ஆகியோரின் தலைமையில், இதற்கான பணிகள், கடந்த ஜனவரி 12ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த மேம்பாலம் கொஹுவல சந்தியிலிருந்து கொழும்பு - ஹொரணை 120 பஸ் பாதையில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

மேம்பாலம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர், மேம்பாலத்தின் கீழ் பகுதியால் நுகேகொட - களுபோவில வீதிக்கு செல்ல முடியும்.

## ஆளும் தரப்பின் பின்வரிசை வழுக்குகிறது

ஆளுங்கட்சியின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் கருத்து மோதலொன்று ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னரும் ஆளுங்கட்சியின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் கருத்து மோதல் ஏற்பட்டிருந்த நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் தலையிட்டு அதனைத் தீர்த்து வைத்திருந்தனர்.

இந்நிலையில் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தங்களது நிலைப்பாடுகளை தெரிவித்து வருகின்றமை தொடர்பில் தற்போது மீண்டும் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது.

இக்கருத்து மோதல் அரசாங்கத்தின் பின்வரிசை எம்.பிக்களுக்கு இடையில் பிளவு ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## 10 வருட காலத்தில் 150,000 தலைவர்கள்

### பணிப்பாளர் அஷ்ரப் நம்பிக்கை

எதிர்வரும் 10 வருட காலத்தில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் எதிர்கால தலைவர்களை மலர செய்வதற்கு தலைமைத்துவ மேம்பாட்டுக்கான தேசிய மத்திய நிலையம் திடசங்கற்பம் பூண்டு செயற்படுகின்றது என அதன் பணிப்பாளர் எம். ஐ. எம். அஷ்ரப் தெரிவித்தார்.



தலைமைத்துவ மேம்பாட்டுக்கான தேசிய மத்திய நிலையத்தில் சனிக்கிழமை (26) ஊடகவியலாளர்களை சந்தித்து நிலையத்தின் புதிய வேலை திட்டங்கள் தொடர்பாக விளக்கமளித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவின் ‘கம்உதாவ’ வேலை திட்டத்தின் கீழ் எம்பிலிப்பிட்டியவில் 35 ஏக்கர் நிலத்தில் உருவாக்கப்பட்ட கிராமிய தலைவர்களை பயிற்றுவிப்பதற்கான சர்வதேச பயிற்சி நிலையமே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் தலைமைத்துவ மேம்பாட்டுக்கான தேசிய மத்திய நிலையமாக புதிய பொலிவு பெற்றது.

‘கம்உதாவ’ வேலை திட்டத்தின் கீழ் பல அமைப்புகள் உருவாக்கப்பட்டன. ஆனால் அவற்றுள் இப்போதுவரை நின்று நிலைத்து நீடித்து தொடர்ந்தும் சேவையாற்றி வருகின்ற வரலாற்று பெருமை தலைமைத்துவ மேம்பாட்டுக்கான தேசிய மத்திய நிலையத்தையே சேரும் என்றார்.

ஒவ்வொரு கிராமத்தில் இருந்தும் ஒவ்வோர் இளம் தலைவரைத் தெரிவு செய்து வருடாந்தம் 15,000 இளம் தலைவர்களை உருவாக்கி 2022 - 2032 கால பகுதியில் மொத்தமாக 150,000 இளம் தலைவர்களை தயார் செய்து எதிர்கால தலைவர்களாக மலர செய்கின்ற வேலை திட்டம் இப்போது ஆரம்பிக்கப்பட்டு உள்ளது என்றும் அவர் சொன்னார்.

International Labour Organization

**CALL FOR EXPRESSION OF INTEREST**
**Translation Services**

The International Labour Organization's (ILO) Country Office in Sri Lanka and the Maldives is seeking your expression of interest together with the financial proposals for translation services (English, Sinhala, and Tamil languages). If you are a sworn translator or work for a company that employs sworn translators, you are encouraged to submit a bid to ILO for translation services. Partial bidding is also accepted (quotes in Sinhala or Tamil only), and the price is valid for one year from May 1st, 2022 to April 30th, 2023.

For further details see:
**https://www.ilo.org/colombo/info/pub/vid/WCMS_839357/lang-en/index.htm**

Please send your expression of interest together with financial proposals to **cmb-finance@ilo.org** by April 10th, 2022.

உறவினர்கள் தாக்கப்பட்டமையை எதிர்த்து

# ஞாயிறு பேரணி

■ வி.நிதர்ஷன்

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு சர்வதேச நீதி கோரி, யாழ்ப்பாணத்தில் கண்டனப் பேரணியொன்றை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ, யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் விஜயம் செய்தபோது, அதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்டனர்.



இது தொடர்பான கலந்துரையாடல், நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று முன்தினம் (26) நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் போது, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர்.

கலந்துரையாடலுக்குப் பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் செயலாளர் அ.லீலாவதி, “எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு, யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் ஆரம்பிக்கும் கண்டனப் பேரணி, முற்றவெளியில் நிறைவடையும்.

“இந்தப் பேரணியில், கட்சி மற்றும் அரசியல் ரீதியான வேறுபாடுகளை கடந்து, போராட்டத்தை எதிர்கொள்ள தீர்மானித்துள்ளோம்” என்றார்.



புதுக்குடியிருப்பில்

## எரிபொருளே இல்லை

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசலுக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்றது. வாகன சாரதிகள் டீசலை பெற்றுக்கொள்ளமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில், புதன்கிழமை (23) தொடக்கம் நேற்று (27)வரையும் எதுவித எரிபொருட்களும் இல்லாத நிலையில், எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குள் செல்ல முடியாதவாறு கயிறால் இழுத்துக் கட்டப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல் அனைத்தும் தீர்ந்துள்ள நிலையில், எப்போது வரும் என்று தெரியாத நிலை காணப்படுவதாக தெரிவித்துள்ளார்கள்.

எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காகச் செல்லும் வாகன சாரதிகள், ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றன.





## திருப்பலி...

வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்ப்பாணம், குருநகர் புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழா திருப்பலி, நேற்று முன்தினம் (26) நடைபெற்றது. கூட்டுத்திருப்பலியுடன் திருச்சொரூபப் பவனியை யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு. ஜெபரட்ணம் அடிகளார் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார்.

(படங்கள்: எஸ். தில்லைநாதன்)

117 குடும்பங்களுக்கு

## போக்குவரத்து வசதியின்மை



■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள தட்டுவன்கொட்டி பிரதேசத்தில் 117 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில், போக்குவரத்து வசதியின்மை மற்றும் அடிப்படை வசதிகள் இன்மையால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்களது பிரதான தொழிலாக மீன்பிடியும் விவசாயமும் காணப்படுகின்றன.

மேற்படி கிராமத்தில் உள்ள பாடசாலை தரம் 11 வரையான வகுப்புகளை மாத்திரம் கொண்டிருப்பதால், உயர் கல்விக்காக பரந்தன் மற்றும் கிளிநொச்சி பாடசாலைகளுக்கு செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

அத்தோடு, வைத்தியத் தேவைகள், ஏனைய அத்தியாவசிய தேவைகளுக்கும் 20 கிலோ மீற்றர் கடந்து, கிளிநொச்சி, பரந்தன் ஆகிய இடங்களுக்கே செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

போக்குவரத்து வசதிகள் எதுவும் இல்லாத நிலையில், இந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

2014ஆம் ஆண்டு, உலக உணவுத் திட்டத்தால் இம்மக்களின் மருத்துவத் தேவைக்கான போக்குவரத்துக்களுக்கு ஓட்டோ ஒன்று வழங்கப்பட்டிருந்தது. எனினும், குறித்த ஓட்டோ பழுதடைந்த நிலையில் காணப்படுவதால், இதனை திருத்தி பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து தர வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

போக்குவரத்து திணைக்களத்தால்

## யாழ்ப்பாணத்தில் நடமாடும் சேவை

■ வி.நிதர்ஷன்

மோட்டார் போக்குவரத்து திணைக்களம், வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் என்பன இணைந்து நடத்தும் ‘வீதி ஒழுங்குகளைப் பேணி பாதுகாப்பாகப் பயணிப்போம்’ எனும் தொனிப்பொருளிலான நடமாடும் சேவை, யாழில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில், வட மாகாண மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் சுஜீவா சிவதாஸ் தெரிவிக்கையில், “ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை யாழ்ப்பாணம், கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபை வளாக கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.


பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாத பிரச்சினைகளை இனங்கண்டு, தீர்க்கும் நோக்கில், ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்த நடமாடும் சேவை தொடர்பான மேலதிக விவரங்களை பிரதேச செயலகங்களில் உள்ள மோட்டார் வாகன போக்குவரத்து பிரிவிலும் பெற்றுக்கொள்ளமுடியும்” என்றார்.

## மரக்கடத்தல் முறியடிப்பு

■ க.அகரன்

வவுனியா, தவசிக்குளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கடத்திச் சென்ற முதிரை மரக்குற்றிகளை, மடுக்கந்தை விசேட அதிரடிப்படையினரால் மடக்கிப்பிடிக்கப்பட்டு, நெளுக்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இரகசியத் தகவலின் அடிப்படையில், மடுக்கந்தை விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் (26) இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்ததாக. வவுனியா, நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.



மேலும், இக்கடத்தலில் ஈடுபட்ட ஓமந்தை, கூமாங்குளம், தோனிக்கல் பகுதியை சேர்ந்த மூவரை கைது செய்ததுடன், கடத்தலுக்குப் பயன்படுத்திய கப் ரக வாகனம் உட்பட, 10 முதிரை மரக்குற்றிகளையும் கைப்பற்றி, பொலிஸில் ஒப்படைக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

கடமை நேரத்தில் ‘டிமிக்கி’ கொடுத்தால்

# ஆப்பு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளில், கடமை நேரத்தில் வைத்தியசாலைகளில் இல்லாத உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல். எம். றிபாஸ், நேற்று (27) தெரிவித்தார்.



மாவட்ட மற்றும் பிரதேச வைத்தியசாலைகளில் கடமை நேரத்தில் அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் இருப்பதில்லையென பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாகவும் தெரிவித்தார்.

இம் முறைப்பாடுகளுக்கமைய, சுகாதார அதிகாரிகள் குழுவால் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதற்கமைய மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது இரண்டு வைத்தியசாலைகளில் கடமை நேரத்தில் இல்லாத உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, இடமாற்றம், பதவிக் குறைப்பு கடிதமும் அவ்விடத்திலேயே வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் கடமை நேரத்தில் இல்லாத உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தொடர்பாக பொதுமக்கள் வைத்தியசாலைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விரைவுத் தகவல் குறியீடு (கியூ. ஆர்) ஊடாகவும், எழுத்து மூலம் அல்லது வாய்மொழி மூலமாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் நிலையத்துக்கு உடனடியாக அறிவிக்குமாறு கேட்டுள்ளார்.



குப்பைகளை தரம்பிரிக்க

## விசேட ‘பை’

■ அஸ்லம் எஸ்.மௌலானா

கல்முனை மாநகர சபை எல்லையினுள் குப்பைகளை தரம்பிரித்து சேகரிப்பதற்காக மாநகர சபையால் விசேட பைகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினருடனான விசேட கலந்துரையாடல், மாநகர மேயர் ஏ.எம்.றகீப் தலைமையில், மேயர் செயலகத்தில் நேற்று (27) நடைபெற்றது.

சமையலறைக் கழிவுகள், உணவுக் கழிவுகள், மரக்கறி, இலை குழைகள் போன்ற உக்கக்கூடிய கழிவுகளை சேகரிப்பதற்காக பச்சை நிறப் பையும், பிளாஸ்டிக், பொலித்தீன், டின்கள், உக்க முடியாத கழிவுகளை சேகரிப்பதற்காக மஞ்சள் நிறப் பையும் என்ற அடிப்படையில் இரு நிறங்களிலான பைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## மூவர் பதவி இழப்பு

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன், நியாஸ் ஆதம்

ஏறாவூர் நகர சபையின் பிரதித் தவிசாளர், உறுப்பினர், ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச சபையின் உறுப்பினர் உட்பட மூவர் பதவி இழந்துள்ளதாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.



மட்டக்களப்பு, மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் எம். பி. எம். சுப்யான் இந்த வர்த்தமானி அறிவித்தலை கடந்த 18ஆம் திகதி வெளியிட்டுள்ளார்.

அதன் பிரகாரம் 262ஆம் அத்தியாயமான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10அ(1)(அ) என்னும் பிரிவின் கீழ், இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஏறாவூர் நகர சபையின் உறுப்பினரும் அச்சபையின் பிரதித் தவிசாளரான மீராலெப்பே றெபுபாசம், உறுப்பினரான அலியார் பாத்திமா பஜிகா, ஏறாவூர்ப்பற்று பிரதேச சபையின் உறுப்பினரான எம். எஸ். முஹம்மது ஜவ்பர் ஆகியோரே பதவியை இழந்துள்ளனர்.

இவர்களை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்புரிமையில் இருந்து நீக்கியுள்ளதால், இவர்கள் உள்ளூராட்சி மன்றங்களில் வகித்த உறுப்பினர் பதவியை இழந்துள்ளனர்.



## மீன் வலையில் முதலை

■ எப்.முபாரக்

திருகோணமலை, சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராமத்துக்குள் புகுந்து பரபரப்பை ஏற்படுத்திய ஐந்தடி நீளமுடைய முதலை, நேற்று முன்தினம் (26) மாலை மடிக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது.

சீனக்குடா, கொடபே பகுதியில் உள்ள மீனவர் ஒருவரின் மீன்பிடி வலையினில் இம்முதலை சிக்கியது.

உடனடியாக சீனக்குடா பொலிஸாருக்கும், பிராந்திய வன ஜீவராசி பகுதியினருக்கும் தகவல் வழங்கப்பட்டு, வன ஜீவராசி பாதுகாப்பு அதிகாரிகளால் முதலை, திருகோணமலை வனப் பகுதியில் விடுவிக்கப்பட்டது.

திருகோணமலையில்

## மூன்று மாதங்களில் 27 காச நோயாளிகள்

■ எப்.முபாரக்

திருகோணமலை மாவட்டத்தில் இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரை 27 புதிய காச நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என திருகோணமலை மாவட்ட சுவாச நோயியல் பிரிவின் வைத்தியர் சுரேஷ்குமார் தெரிவித்தார்.

திருகோணமலை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “திருகோணமலை மாவட்டத்தில் ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் 27 புதிய காச நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.



2021ஆம் ஆண்டு 100 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ள நிலையில், காச நோயாளிகளின் எண்ணிக்கை இவ்வருடம் அதிகரித்துள்ளது.

“மேலும், சுவாச நோயால் ஏற்படும் காச நோயானது திருகோணமலை மாவட்டத்தில் உப்புவெளி, கிண்ணியா, மூதூர், கோமரங்கடவல ஆகிய பிரதேசத்திலே அதிகளவான நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்” என்றார்.

அக்கரைப்பற்று சிறுமியின்

## குடும்பத்துக்கு உதவி

■ வா.கிருஸ்ணா

அம்பாறை, அக்கரைப்பற்று பகுதியில் வறுமை நிலையில் உள்ள சிறுமி ஒருவர் வர்த்தக நிலையமொன்றில் களவு செய்ததாகக் கூறி, அந்த வர்த்தக நிலைய உரிமையாளரால் தாக்கப்பட்ட காணொளி, சமூக வலைத்தளங்களில் கடந்த வாரங்களில் பகிரப்பட்டு வந்தது.

அதனை தொடர்ந்து அச்சிறுமி, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், இது தொடர்பிலான விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.



இந்நிலையில், தாக்கப்பட்ட சிறுமி தொடர்பான வறுமை நிலை தொடர்பிலும் சமூக ஊடகங்கள் ஊடாக பகிரப்பட்டு வந்தது.

இந்நிலையில், புலம்பெயர் நாடுகளில் உள்ள சமூக ஊடக செயற்பாட்டாளர்களான தமிழ் இளைஞர்களால் உருவாக்கப்பட்டுள்ள ‘வணக்கம் வாழ்க தமிழ்’ அமைப்பின் ஊடாக ஒரு தொகை பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன.

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி




தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய, பசறை, கனவரல்ல இல.01 தமிழ் வித்தியாலயத்தில் நான்கு மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்று பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் பி.ஹரிஷான் - 173, வி.மேனகாஷினி - 167, எஸ்.ருக்ஷிகா - 165, வை. தரணியா - 149 என புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவர்களுடன் வகுப்பாசிரியை திருமதி. எல். கனிச்சுடர், பாடசாலையின் அதிபர் டி.காந்தீபன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.



பண்டாரவளை வலயத்துக்கு உட்பட்ட பலகல எல்ல தமிழ் வித்தியாலயத்தில் 2021 ஆம் ஆண்டிற்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் ம.ஸ்ரீயாபிருந்தா (166 -புள்ளி), ரா.கபிஷாலனி (165 - புள்ளி), க.கிருஷாந்தினி (156 -புள்ளி) வி.கிருத்திக்ஷன் (158 -புள்ளி) ஆகியோரும் பாடசாலை அதிபர் க.சேதுகாந், வகுப்பாசிரியர் திருமதி. பெ.புண்ணியகலா ஆகியோரை படத்தில் காணலாம்.

(நடராஜா மலர்வேந்தன்)



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தலவாக்கலை தேசிய பாடசாலை மாணவன் ஸ்ரீஸ்கந்தராஜா ஜஸ்மிதன் 165 புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் தலவாக்கலையைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராஜா கலைச்செல்வி தம்பதிகளின் புதல்வராவார்.



வட்டவளை -லொனக் தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி சாந்தகுமார் டில்ருக்சி 146 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்துள்ளார். எட்டு வருடங்களின் பின்னர் சித்தியடைந்து, பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ள இவரை கற்பித்த ஆசிரியர் எம். நிசாந்தனி, பாடசாலை அதிபர் பி.ஆர். அலக்சான்டர், பெற்றோர்கள் அனைவரும் வாழ்த்துகின்றனர்.

## எரிபொருள் வாங்கி கொடுத்த பொலிஸார் இருவருக்கு சிக்கல்

ஷேன் செனவிரத்ன

பிலிமத்தலாவ பிரதேசத்தில் சிபெட்கோ எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு வந்த கடுகண்ணாவ போக்குவரத்துப் பொலிஸார் இருவர், அந்த நிலையத்தின் முகாமையாளரை அச்சுறுத்தி, வர்த்தகர்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொடுத்த சம்பவம் தொடர்பில், மத்திய மாகாண பிரதி பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையின் பேரில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்த நிலையில், பொலிஸ் அதிகாரிகள் இருவர், வர்த்தகர்கள் சிலரை, வரிசைக்கு அப்பால் அழைத்துவந்து, 4,000 லீற்றர் டீசலை பெற்றுக்கொடுத்துள்ளனர்.

இந்த எரிபொருள் நிலையகத்துக்கு, 25ஆம் திகதி பகல் 1.30 மணிக்கு, 6,500 லீற்றர் டீசலை எடுத்துக்கொண்டு பௌசர் வந்தது. அதில், பொலிஸார் இருவரின் தலையீட்டால், 4,500 லீற்றர் வர்த்தகளுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டது. இதனால், வரிசையில் நின்றிருந்த பலரும் எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியாமல் போனது என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







## வாருங்கள்... வந்து பாருங்கள்!!

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் செயற்பாடுகள், ஐரோப்பிய ஒன்றியத்தால் முன்னெடுக்கப்படுகின்றன. நாட்டில் முதன்முறையாக, மலையகத்தில் சுற்றுலாத்துறையினர் நடந்துச் செல்லும் பாதை, ஊவா மாகாண சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் ஊடாக 1.3 மில்லியன் நிதி உதவியின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்றது.

(படங்களும் தகவலும்: சுமணசிறி குணதிலக்க)

# நில்! கவனி!

இந்திக அருண குமார

நாட்டின் பல பாகங்களிலும் பல்வேறான வகைகளில், கொள்ளை, திருட்டு, வழிபறி, அச்சுறுத்தி அபகரித்தல் உள்ளிட்ட சம்பவங்கள் இடம்பெறுகின்றன என சுட்டிக்காட்டியுள்ள பொலிஸார், எந்தவொரு விடயமாக இருந்தாலும் நிதானமாக நின்று, கவனித்துவிட்டு, அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பொதுமக்களிடம் அறிவுறுத்தியுள்ளனர்.

மக்களை தெளிவுப்படுத்தும் நடவடிக்கை, ஒவ்வொரு பொலிஸ் நிலையங்கள் ஊடாகவும் முன்னெடுக்கப்பட்டன. மாத்தளை, நாவுல பொலிஸ் பிரதேசத்தில் மக்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் கடந்த இரண்டு நாள்களாக முன்னெடுக்கப்பட்டன.

ஒலிப்பெருக்கியை பயன்படுத்தியே இந்த தெளிவூட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

தங்க நகைகளை அபகரித்தல், வீடு, வர்த்தக நிலையங்களை உடைத்தல், பொருட்களை களவெடுத்தல் ஆகியன முன்னெடுக்கப்படுகின்றன.

ஆகையால் வீட்டிலிருந்து வெளியேறும் போது, சகலரும் ஒரே தடவையில் வெளியேறக் கூடாது. அவ்வாறு சென்றுவிட்டாலும், சென்ற வேலையை சீக்கிரமாக முடித்துக்கொண்டு வீடுகளுக்குத் திரும்பிவிடவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. வீதிகளில் தனியாகவோ, குடும்பமாகவோ பயணிக்கும் போது சிந்தித்துச் செயற்படவேண்டும்.

தெரியாதவர்கள், ஏதாவது விளக்கம் கேட்பார்களாயின், மிகநெருக்கமாகச் சென்று, விளக்கமளிக்க முயற்சிக்கக்கூடாது. அத்துடன், வாகனங்களை விட்டுவிட்டு இறங்கிச் செல்லும் போதும், வாகனங்கள் தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும்.

இதேவேளை, வாகனங்களின் முன்பக்கக் கண்ணாடிகளை நோக்கி, முட்டைகளை வீசியெறியும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அவ்வாறான நேரத்தில், முன்கண்ணாடியின் 'வைப்பரை' உடனடியாகச் செயற்படுத்த வேண்டாம் என்றும் பல பொலிஸ் நிலையங்களின் ஊடாக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

முட்டை வீச்சுக்கு இலக்காகிவிட்டால், வாகனத்தை வீதியோரத்துக்கு நிறுத்த முயற்சிக்க வேண்டாம். தண்ணீர் ஊற்றி கழுவ வேண்டாம். முடிந்தால், செல்லும் பயணித்தை தொடராமல், முட்டை வீசிய இடத்தை கடக்காமல் திரும்பிவிட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தனியாக பயணம் செய்வதாயின், பெறுமதியான பொருட்களை கூடுமானவரை எடுத்துச் செல்வதை தவிர்க்குமாறு, பொதுமக்களிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## "மக்களே வாருங்கள்" அழைக்கிறார் ஸ்ரீ

மக்கள் விரோத அரசாங்கத்தை விரட்டியடிப்பதற்கு, மக்கள் வீதிக்கு இறங்கி தொடர்ச்சியாக போராட வேண்டும் எனத் தெரிவித்துள்ள தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன். வீதிக்கு இறங்க, வருமாறு அழைத்தார்.



ஹட்டனில் நேற்று (26) நடைபெற்ற தமிழ் முற்போக்கு கூட்டணியின் செயற்பாட்டாளர்களுக்கான கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"எமது நாட்டில் அராஜக ஆட்சியே, இன்று இடம் பெறுகின்றது.

சகல மக்களுக்கும் ஏதோ ஒரு வகையில் நாளுக்கு நாள் பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய திராணியற்றவர்களாக இன்றைய ஆட்சியாளர்கள் உள்ளனர்" என்றார்.

அரசாங்கம் தனது கடன் சுமையை மக்கள் மீது திணித்துள்ளது. இதனால் தமது வாழ்வாதாரங்களை இழந்து, மக்கள் விரக்தி நிலையில் உள்ளனர். வீட்டுக்குள் இருந்து எதிர்ப்புத் தெரிவிப்பதில் பிரயோசனம் இல்லை. வீதியில் இறங்கிப் போராட வேண்டும்.

அரசாங்கத்துக்கு எதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், 3ஆம் திகதி, ஞாயிற்றுக்கிமை தலவாக்கலை நகரில், பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது. அதில், கலந்துகொண்டு, தங்களுடைய எதிர்ப்பை வெளிக்காட்டுமாறு, மக்களிடத்தில் கோரிக்கை விடுத்தார்.

## சீமெந்து லொறி புரண்டது



தனமல்வில பகுதியில் இருந்து வெள்ளவாயவை நோக்கி, சீமெந்து ஏற்றிக்கொண்டுவந்த லொறியொன்று, ஆரியசிறிகம சந்தியில் நேற்றுமுன்தினம் (26) புரண்டு விபத்துக்குள்ளானது.

சம்பவத்தில், சாரதிக்கோ, நடத்துநருக்கே எவ்விதமான காயங்களும் ஏற்படவில்லை. எனினும், சீமெந்து மூடைகள் சேதமடைந்துள்ளன.

### நீரேந்தும் பிரதேசங்கள்
## சற்று ஈரமாகின

ரஞ்சித் ராஜபக்ஷ



காசல்ரீ, மவுசாக்கெல ஆகிய நீர்த்தேகங்களை அண்மித்த நீரேந்தும் பிரதேசங்களில், இடியுடன் கூடிய மழை பெய்தன. இதனால், நீரேந்தும் பிரதேசங்களில் ஓரளவுக்கு ஈரமாகின. எனினும், நீர்த்தேக்கங்களுக்கு நீரை வழங்கும் அளவுக்கு மழை பெய்யவில்லை.

அதுமட்டுமன்றி, மஸ்கெலியா, நல்லத்தண்ணி, நோர்வூட், பொகவந்தலாவை, ஹட்டன் ஆகிய பிரதேசங்களில், சனிக்கிழமை (26) மாலை 4.30 மணிமுதல் சுமார் 30 நிமிடங்களுக்கு இடியுடன் கூடிய மழை பெய்துள்ளது.

மலையகத்தில், கடந்த சில மாதங்களாக நிலவும் வரட்சியான வானிலை காரணமாக, நீரேந்தும் பிரதேசங்கள் வரண்டுள்ளன. நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

30 நிமிடங்கள் பெய்த சிறுமழையால், நீரோடைகளில் நீரின் வேகம் அதிகரித்திருந்தது. நகரங்களில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருந்து. மழை பெய்யுமென சற்றும் எதிர்பாராமையால், நகரங்களுக்கு வந்தவர்களில் பெரும்பாலானோர், நனைந்துகொண்டே வீடுகளுக்குத் திரும்பினர்.

## சமாதான நீதவான்

பி.கேதீஸ்

தேசிய சேமிப்பு வங்கியின் நுவரெலியா கிளையில் கடமையாற்றும் செல்வராஜா நிதர்சன், அகில இலங்கை சமாதான நீதவானாக நுவரெலியா நீதவான் நீதிமன்ற நீதவான் ஜீ.ஜீ.பீ.ஜயசிங்ஹ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.



கொட்டகலை, கணபதி புரத்தை வசிப்பிடமாகக் கொண்ட இவர், தனது ஆரம்பக் கல்வியை நுவரெலியா நம்மாதா பாடசாலையிலும் உயர் தரத்தை ஹட்டன், ஹைலண்ட்ஸ் கல்லூரியிலும் கற்றுள்ளார்.

இவர், நுவரெலியா கல்விக் வலயத்தின் ஆரம்பக்கல்வி உதவி கல்விப் பணிப்பாளரான தேசபந்து எஸ். செல்வராஜாவின் கனிஸ்ட புதல்வராவார்.

## செய்தி துளிகள்

பசறை பரமாங்கடை பகுதியிலுள்ள வீடொன்றில், சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்த உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை, பதுளை பிராந்திய குற்றத்தடுப்பு பொலிஸார், நேற்று முன்தினம் (26) மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் 70 வயதானவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார், சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தனர்.

(ராமு தனராஜா)

காசல்ரீ நீர்த்தேகத்தின் நீர்மட்டம் குறைந்துள்ளது. அங்குள்ள தீவுகளில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்ந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், எட்டுப்பேர் கடந்த 25 ஆம் திகதி இரவு கைது செய்யப்பட்டனர் என ஹட்டன் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்சித் ஜயசேன தெரிவித்தார்.

டிக்கோயா, நோர்வூட், காசல்ரீ நீர்த்தேக்கத்தை அண்மித்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவித்த அவர், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட உபகரணங்களுடன் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (ரஞ்சித் ராஜபக்ஷ)

பூண்டுலோயா பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பூண்டுலோயா நகர ஆற்றிலிருந்து, சீன் கீழ்ப்பிரிவை சேர்ந்த சுப்பையா சங்கர் (வயது 54) சடலமாக, சனிக்கிழமை மீட்கப்பட்டார். இதுதொடர்பிலான மேலதிக விசாரணைகளை பூண்டுலோயா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நீலமேகம் பிரசாந்த்)

தெஹியோவிட்ட, சீதாவக ஆற்றின் முருந்தெட்டுவ பாலத்துக்கு கீழே நீராடிக்கொண்டிருந்த கொழும்பு 12 யைச் சேர்ந்த ரவிஷான் நவோத், ராஜகிரிய ஒபேசேகரபுரவைச் சேர்ந்த சுரேந்திர குமார ஆகிய இருவரும் மரணமடைந்தனர்.

கடந்த 25 ஆம் திகதியன்று சடலங்களாக மீட்கப்பட்ட இவ்விருவரும் 20 வயதானவர்கள் எனத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளுக்குப் பின்னர், உறவினர்களிடம் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றனர். (என். ஆராச்சி)



## "வாங்க...,கேஸ் வாங்கலையோ கேஸ்...."

மலைவாஞ்ஞன்

மலையகத்தில் பல பகுதியில் எரிவாயு விநியோகம் நேற்று (27) இடம்பெற்றன. எரிவாயு சிலிண்டரை பெற்றுக்கொள்வதற்காக, மக்கள் நீண்ட வரிசையில் நிற்பதையும் காணக்கூடியதாக இருந்தது. நுகர்வோரில் பலர், சிலிண்டரை பெற்றுக்கொள்ளாது வீடுகளுக்குத் திரும்பிவிட்டதை அவதானிக்க முடிந்தது.

கொட்டகலை பகுதியிலுள்ள எரிவாயு வர்த்தக நிலையங்களுக்கு சுமார் 40 எரிவாயு சிலிண்டர்கள் வீதம் விநியோகிக்கப்பட்டன. எனினும், அது போதுமானதாக இல்லை என்றும் வர்த்தகர்கள் குற்றஞ்சாட்டினர்.

மலையகப்பகுதியில் கடந்த ஒரு சில வாரங்களாக எரிவாயு தட்டுப்பாடு நிலவி வந்தன. இதனால் எரிவாயு விற்பனை நிலையங்கள் மூடப்பட்டன. எரிவாயுவின்றி பல்வேறு அசௌகரியங்களுக்கு மக்கள் முகம் கொடுத்தனர்.

எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மலையகத்தில் பல உணவகங்கள், சிற்றுண்டிசாலைகள் மூடப்பட்டன. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எரிவாயு சிலிண்டர்கள் வர்த்தகர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இதனால், நுகர்வோர் பெரும் அவதிப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இதய சுத்தியுடன் இருதரப்பும் பேச்சை முன்னகர்த்த வேண்டும்

கூட்டமைப்புக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கும் இடையில், மூன்று தடவைகள் தடைப்பட்ட பேச்சுவார்த்தை, மார்ச் 25 நடந்ததன் பின்னர், அதிரடியான சில நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம் தயாராகிக்கொண்டிருப்பதாகவே அறியமுடிகின்றது.

‘அரசியல் தீர்வு’,‘ காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நட்டஈடு’,‘ வடக்கு, கிழக்கில் காணிகளை அபகரித்தல்’, ‘அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை, காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் முழுமையாக அமல்படுத்தல்’, ‘அரசியல் கைதிகளின் விடுதலை’, ‘வடக்கு, கிழக்கு நிதியம்’ உள்ளிட்டவற்றை குறிப்பிட்டுச் சொல்லமுடியும்.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர், மேற்படி விடயதானங்களுக்கு பொறுப்பான உயர் அதிகரிகளுடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, தொலைபேசியின் ஊடாக தொடர்புகொண்டு, தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பணித்துள்ளதாகவே அறியமுடிகின்றது. அப்படியாயின், பேச்சுவார்த்தைக்குப் பின்னர் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது எனலாம்.

ஆனால், சிலவற்றுக்கு காலம் தேவைப்படும். அரசியல் கைதிகளின் விடுதலையை அதிரடியாகச் செய்யலாம். தென்னிலங்கையை சேர்ந்த இனவாத சக்திகள், ‘புலிகளைத் திறந்துவிட்டனர்’ எனக் கூப்பாடு போடக்கூடும். பயங்கரவாதத்தை முழுமையாக ஒழித்தவராகவே கோட்டாபய பார்க்கப்படுகின்றார் என்பதால், அதன் தாக்கம் குறைந்திருக்கும்.

அதல பாதாளத்துக்குள் விழுந்துகிடக்கும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின், அனைவரையும் அரவணைத்துச் செல்லவேண்டும். டொலரைக் கவர்ந்து இழுக்கும் நோக்கில், வடக்கு கிழக்கு நிதியத்தை ஆளும் தரப்பு யோசனையாக முன்வைத்திருக்கக் கூடும்.

‘அரசியல் தீர்வின்றி, அதற்கான சாத்தியப்பாடுகள் குறைவு’ என விளக்கமளித்து, கூட்டமைப்பு அதற்குப் பதிலடி கொடுத்திருக்கிறது. ஆக, இருதரப்பினரின் முன்பாக இருக்கின்ற பிரச்சினை, ஒன்றின் மீது மற்றொன்று தங்கியிருக்கின்றது.

இதற்கிடையே, நெருக்கடியான சூழ்நிலைக்கு மத்தியில், ஆபத்தான அரசியல் பொறியை வைக்க புலம்பெயர் தமிழர்கள் முயற்சிக்கின்றனர் என்ற குற்றச்சாட்டை, அரசாங்கத்தின் பங்காளியாக இருந்து விலகி நிற்கும் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி முன்வைத்துள்ளது.

அதேபோல, அரசாங்கத்துக்கும் புலம்பெயர் தமிழர்களுக்கும் இடையில் பாலமாக இருப்பதாக எம்.ஏ.சுமந்திரன் எம்.பி தெரிவித்துள்ளார். இது, சமூக வலைத்தளங்களில் கடுமையான விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ‘உலகில் இருக்கும் பாலங்களை விடவும் கடும் ஆபத்தான பாலம்’ என விமர்சிக்கப்பட்டுள்ளது.

பேச்சு ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. தீர்வை நோக்கி, முன்னோக்கி நகர்த்திச் செல்வது இருசாராரின் கைகளிலேயே தங்கியுள்ளது. விமர்சனங்களுக்கு அஞ்சி, நிறுத்திக் கொண்டால், பிரச்சினைக்கு இனியொரு போதுமே தீர்வைக் காணவே முடியாது. ‘புலிகளை அழித்த கோட்டா, நாட்டைத் துண்டாட மாட்டார்’ என்ற மனப்பான்மை, பெரும்பாலான சிங்களவர்களிடத்தில் உள்ளது.

அந்த நம்பிக்கையை காப்பாற்றிக் கொண்டு, கடும் ஆபத்தான பாலம் என்ற விமர்சனத்தைத் தகர்த்தெறிந்து, இதய சுத்தியுடன் இரு தரப்பும் பேச்சை முன்னகர்த்த வேண்டும் என்பதே எமது அவாவாகும்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

திருமணம் செய்யவிருக்கும் ஆண்கள், தமக்கு வரவிருக்கும் மனைவி அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என நான்கு குணாதிசயங்களுடன் பேரழகியாகவும் வசதி படைத்தவளாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள்.

இவ்வாறு எதிர்பார்க்கும் ஆண்கள், உண்மையாக நேர்வழியில் பெண்களை மதிக்கிறார்களா?

எல்லாவற்றையும் பிறரிடம் எதிர்பார்க்கின்றவர்கள், பெண்களுக்கு என்ன கௌரவம் செய்கின்றார்கள்? பெண்களிடம் எதிர்பார்ப்பவர்கள் தங்கள் நிலைபற்றி அறிவார்களா? நீதி, நியாயமற்ற எண்ணங்களுடன் கம்பீரமாகக் கோரிக்கைவிடுவது சரிதானா?

பெண்கள் விடுதலை பற்றி உலகம் பேசுகின்றது. இன்னமும் பெண்கள், முழுவதுமாகச் சுதந்திரம் பெறவில்லை.

ஆனால், தற்போதைய உலகில் மகளிர், அதியுன்னத நிலைக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். சகல துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக வளர்ந்து விட்டார்கள். மாற்றங்களை வரவேற்போம்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# சர்வகட்சி மாநாடும் ஜனாதிபதி - கூட்டமைப்பு சந்திப்பும்




என்.கே. அஷோக்பரன்
Twitter: @nkashokbharan


ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ தலைமையில், சர்வகட்சி மாநாடு நடந்தேறியுள்ளது. இலங்கை இன்று எதிர்கொண்டுள்ள பொருளாதாரச் சிக்கல் நிலையை எதிர்கொள்ளவதற்கான சர்வகட்சிகளின் ஆலோசனைக் களமாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேண்டுகோளின் பேரில் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு, அதன் நோக்கத்தை அடைந்ததோ இல்லையோ, அது அரசியல் பேசுபொருளாக மாறியுள்ளது.

குறிப்பாக, ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அது கனத்த பிரபல்யத்தைத் தேடித்தந்திருக்கிறது. ரணில் அங்கு பேசிய விதம், பேசிய விடயம், கப்ராலின் அரசியல் பேச்சைக் கண்டித்த விதம், பசில் ராஜபக்‌ஷவின் பொய்யை வெளிக்கொண்டு வந்தவிதம் எல்லாம், ரணிலின் பரம விமர்சகர்களைக் கூட கவர்ந்துள்ளது என்றால் அது மிகையல்ல. ஆனால், அதைத் தாண்டி, சர்வகட்சி மாநாடு பற்றிச் சொல்லிக் கொள்வதற்கு, பெரிதாக எதுவும் இருக்கவில்லை என்பதுதான் உண்மை.

சர்வகட்சி மாநாடு தேவையா என்பது முதற்கேள்வி. சர்வகட்சி மாநாட்டில் விவாதிக்கப்பட்ட இந்த விடயத்தை, விவாதிக்கத்தான் பாராளுமன்றம் இருக்கிறது. பாராளுமன்ற அமர்வுகளில் ஜனாதிபதியும் கலந்துகொள்ள முடியும். அப்படியிருக்கையில் பாராளுமன்றத்தைத் தவிர்த்து, பாராளுமன்றத்துக்கு வெளியே, சர்வகட்சி மாநாட்டைக் கூட்ட வேண்டிய தேவையில்லை. அது பாராளுமன்றத்தின் முக்கியத்துவத்தைக் குறைப்பதாகவே அமைகிறது என்ற குற்றச்சாட்டுகளில் நியாயம் இருக்கிறது.

இலங்கையின் நிதியமைச்சர், ஒரு அமைச்சராக பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறவேண்டியவர். பாராளுமன்றத்துக்கு வருவதேயில்லை என்பது எவ்வளவு பெரிய அநியாயம்; அவமானம்! பாராளுமன்றம் என்ற பலமான கட்டமைப்பை உதாசீனம் செய்து, அதற்கு அப்பாற்பட்டு இதுபோன்ற, எதுவித அரசியலமைப்பு, அல்லது சட்டக்கட்டமைப்புக்கும் உட்பட்டிராத சர்வகட்சி மாநாடுகளை நடத்துவதன் பயன் என்ன என்பதைப் பற்றி, அதைக் கூட்டுவோர் மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்.

எது எவ்வாறாயினும், இலங்கையின் ஜனாதிபதி ஒரு சர்வகட்சி மாநாட்டைக் கூட்டியிருக்கின்ற பொழுதில். அதனை எதிர்ப்பவர்களாக இருந்தாலும், அதில் கலந்துகொண்டு, தமது எதிர்ப்பைப் பதிவு செய்வதுதான் முறையானதாக இருக்கும்.

புறக்கணிப்பு என்பது, எதிர்ப்பின் ஒரு வழியாகக் கருதப்பட்டாலும், எதிர்ப்பும், புறக்கணிப்பும் ஒன்றல்ல. புறக்கணிப்பு என்பது, நேரடிச் சந்திப்புகளில், கருத்துரைப்புகளில், விவாதங்களில், ஈடுபடும் இயலாமையையும் சுட்டி நிற்கிறது.

மேலும், தங்களால் முடியாத நிலையில், அனைத்துக் கட்சிகளிடமும் தற்போதுள்ள பிரச்சினைக்கு தீர்வு கேட்டு ஜனாதிபதி நிற்கும் போது, அந்த வாய்ப்பைப் பயன்படுத்தாது இருப்பதானது, தம்மிடமும் அந்தப் பிரச்சினைக்கு தீர்வில்லை என்பதன் மறைமுக வெளிப்பாடுதான் என்று மக்கள் கருதக்கூடும்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தவிர்ந்த வடக்கு-கிழக்கின் முக்கிய தமிழ்த் தேசிய கட்சிகளும், இந்தச் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்டிருக்கவில்லை; அல்லது புறக்கணித்திருந்தார்கள்.

சஜித் பிரேமதாஸ கலந்து கொண்டிருந்தாலும் அது எந்தப் பயனையும் தந்துவிடப்போவதில்லை. ரணிலைப் போன்ற அரசியல் அறிவோ, பொருளாதார அறிவோ, அரசியல் அனுபவமோ, பக்குவமோ சஜித் பிரேமதாஸவிடம் இருப்பதாகத் தெரியவில்லை; அல்லது, இதுவரை அவர் அவற்றை வெளிக்காட்டவில்லை.

இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு எனும் போது, குறைந்தபட்ச பொருளியல் அறிவின்றி, அதைப் பற்றி கலந்தாலோசிக்கவே முடியாது. சர்வகட்சி மாநாட்டில் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில், ஒரு பாலர் வகுப்புப் பிள்ளை போல, சஜித் பிரேமதாஸ காட்சியளித்திருப்பார்.

ஆகவே, சஜித் பிரேமதாஸ இந்தச் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளாமை புரிந்துகொள்ளத்தக்கதே. ஆனால், பிரதான எதிர்க்கட்சி, சர்வகட்சி மாநாட்டை புறக்கணிக்காது, ஒரு பிரதிநிதியையாவது அனுப்பியிருக்க வேண்டும். ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரட்ண அதற்கு மிகப்பொருத்தமானவர்களாக இருந்திருப்பார்கள்.

மறுபுறத்தில், ஜே.வி.பி என்பது ஓர் எதிர்க்கும் கட்சி. எல்லாவற்றையும் எதிர்க்கும் கட்சியொன்றின் ஒரே ஆயுதம், எதிர்ப்பு மட்டும்தான். அவர்களின் பொருளாதார சித்தாந்தம் என்பது, காலாவதியாகிப்போன கம்யூனிஸ சித்தாந்தம்தான். அவர்களால் இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார சிக்கலுக்கு, எந்தத் தீர்வையும் முன்வைக்க முடியாது.

ஆகவே, மக்களின் கோபத்தை, ராஜபக்‌ஷர்களுக்கு எதிரான மனநிலையை, தமது வாக்குவேட்டைக்கு பயன்படுத்த முடியுமா என்ற நிகழ்ச்சி நிரலில்தான் அவர்கள் இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, ஜே.வி.பி கலந்துகொண்டாலும் கலந்துகொள்ளாவிட்டாலும், பொருளாதாரப் பிரச்சினை தொடர்பில், அவர்களால் ஆகக்கூடியதொரு நன்மை கிடையாது.

தீவிர தமிழ்த் தேசிய கட்சிகளைப் பொறுத்தவரையில், அவையும் ஜே.வி.பி போல எதிர்ப்பு அரசியலை மூலதனமாகக் கொண்டவை. ராஜபக்‌ஷ எதிர்ப்புக்கு அவை கொடுக்கும் முக்கியத்துவத்தை, மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குக் கொடுப்பதாகத் தெரியவில்லை. இன்றைய பொருளதாரப் பிரச்சினைக்கு, தமிழ் மக்களும் விதிவிலக்கல்ல. ஆனால், 30 வருட யுத்தம் பெற்றுக்கொடுத்த அனுபவத்தின் வாயிலாக, இதுபோன்ற பொருளாதார சிக்கல் நிலையில், சமாளித்து வாழும் தன்மையை மற்ற இலங்கையர்களைவிட அவர்கள் நன்கு கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

எரிபொருள், எரிவாயுத் தட்டுப்பாடு, பால்மா தட்டுப்பாடு, அத்தியாவசிய பொருட்கள், மருந்துகளின் தட்டுப்பாடு என்பதெல்லாம் தெற்கிற்குப் புதியது. 1977களின் பின்னர், தெற்கு இவற்றை பெரிதாக அனுபவித்தது கிடையாது. ஆனால், வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள், இந்த அத்தனை சவால்களுடும் பல தசாப்தங்கள் வாழ்ந்தவர்கள். வடக்கு-கிழக்கு மக்களை அந்த நிலைக்கு கொண்டு சென்றது, இந்தத் தெற்கின் அரசியல் அல்லவா?

ராஜபக்‌ஷர்களுக்கு ஆலோசனை தர விரும்பாவிட்டாலும், குறைந்தது மேற்சொன்ன விடயத்தையாவது இந்தத் தீவிர தமிழ்க் கட்சிகளாவது பதிவுசெய்திருக்கலாம் இல்லையா? 1950களிலிருந்து கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாதமும் இனவெறியும் பெருந்தேசியவாதமும், இந்நாட்டை இன்று சின்னாபின்னமாக்கி இருக்கிறது என்பதை, மீண்டுமொருமுறை பதிவுசெய்வதையாவது செய்திருக்கலாம் இல்லையா?

இவர்களின் புறக்கணிப்பால், யாருக்கு என்ன பலன் என்பதை, தமிழ் மக்களுக்கு இவர்கள் சொல்லக் கடமைப்பட்டுள்ளார்கள்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அணுகுமுறை பாராட்டுக்குரியது. உணர்ச்சிவயப்பாடுகளுக்கு அப்பாற்பட்டு, அரசியல் முதிர்ச்சியோடு தமிழ்த் தேசிய கூட்டமை செயற்பட்டிருக்கிறது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்ற நல்லெண்ண முடிவு, இரண்டு வருடங்களாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சந்திக்க மறுத்த ஜனாதிபதி, தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் நீண்ட சந்திப்பொன்றை நடத்தும் நிலையை தருவித்திருக்கிறது.

‘அரசியல் என்பது, சாத்தியமானவற்றில், அடையக்கூடியவற்றின் கலை’ என்ற ஒட்டோ வொன் பிஸ்மார்க்கின் கூற்றுக்கு ஏற்றால் போன்றதோர் அரசியலை, தமிழத் தேசிய கூட்டமைப்பு முன்னெடுத்து இருக்கிறது. இது தமிழ்த் தேசிய அரசியலின் பிரதான அரசியல்பாதை, இலட்சிய அரசியலை நோக்கிய எதிர்ப்புப் போராட்டவழி என்பதிலிருந்து, சாத்தியமானவற்றை அடைவதற்கான ராஜதந்திர வழிக்கு பெருமளவு மாறியுள்ளதை எடுத்துக்காட்டி நிற்கிறது. இதன் உள்ளக, வெளியக பரிமாணங்கள், பூகோள அரசியலின் தாக்கங்கள் என்பனவெல்லாம் தனித்து ஆராயப்பட வேண்டியவை. ஆனால், பிரதானமாக தமிழ்த் தேசிய அரசியல் இன்று நிற்கு சந்தி இதுதான்.

சாத்தியமானவற்றை, சாத்தியமான பொழுதுகளில், சாத்தியப்படுத்துவது மிகப் பெரிய அரசியல் வெற்றி. வடக்கு-கிழக்கில் காணிச் சுவீகரிப்புகளை நிறுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய உத்தரவிட்டிருக்கிறார் என்று, இன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனான ஜனாதிபதியின் சந்திப்பின் பின்னர் வந்த செய்தி அறிக்கைளுக்கும், குறித்த சந்திப்புக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று சொல்லிவிட முடியுமா?

எந்தப் புலம்பெயர் தமிழர்களை எதிர்மறை வெளிச்சத்தில் ஆளுங்கட்சியினர் பிரசாரம் செய்திருந்தார்களோ, இன்று ஜனாதிபதி அதே புலம்பெயர் தமிழர்களை நாட்டுக்கு வாருங்கள்; முதலீடுகளைக் கொண்டு வாருங்கள்; உங்கள் பாதுகாப்பிற்கு நான் உத்தரவாதம் என்று அழைப்பு விடுக்கிறார். இந்தச் சந்தர்ப்பத்தை சாத்தியமாகப் பயன்படுத்துவதுதான் அரசியல் வெற்றி. அதனை விட்டுவிட்டு, வீண்வம்பு பேசிக்கொண்டிருப்பதால் யாருக்கும் எந்தப் பயனுமில்லை. அதனைப் புரிந்துகொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இயங்குவது பாரட்டுக்குரியதே!

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் இந்தச் ‘சாத்தியமானதை, சாத்தியமான பொழுதில் சாத்தியப்படுத்து முயலும்’ அரசியல் பயணம் தொடரும் என எதிர்பார்ப்போம்.

## கடிதங்கள்

### மாந்தை கிழக்கில் அதிகாரிகளின் துணையுடன் காணிகள் ஆக்கிரமிப்பு

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 15 கிராம அலுவலர் பிரிவுகளிலும், 3,200 க்கும் மேற்பட்டோர், விவசாயச் செய்கை மேற்கொள்வதற்கான காணிகள் இல்லாத நிலையில், பெரும் துன்பங்களை அனுமதித்து வருகின்றனர்.

குறிப்பாக, இப்பிரதேசத்தில் தொழில் வாய்ப்புகள் அற்ற நிலையிலேயே ஏராளமான இளைஞர்கள் யுவதிகள் இருக்கின்றனர். இவர்கள் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு ஆர்வமாக உள்ள போதிலும் பயிர் செய்கையில் ஈடுபடுவதற்கான காணிகள் இல்லாத நிலை காணப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் குளங்கள், வயல் நிலங்கள் ஏராளமாகக் காணப்படுகின்ற போதும், அவற்றைப் பயன்படுத்தக் கூடியவர்களுக்கு வழங்குவதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. மாறாக, வனவளத் திணைக்களத்தால் ஒதுக்கு வனப் பிரதேசங்கள் என்ற அடிப்படையில், கடந்த சில நாள்களாக எல்லையிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், கைவிடப்பட்ட வயல் நிலங்களும் அரச காணிகளும் அதிகாரிகளின் துணையுடன், வெளியாட்களாலும் அரசியல் எடுபிடிகளாலும் துப்புரவு செய்யப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வசதி படைத்தவர்கள் காணிகளை ஆக்கிரமித்து வருகின்ற போதிலும், இந்தப் பிரதேசத்திலேயே காணிகளின்றி வாழ்வாதாரத்துக்கு வழியின்றி பாதிக்கப்பட்டிருக்கும் அதே பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு காணிகளை பெற்றுக் கொடுப்பதற்கு, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளார்கள்.

-யது பாஸ்கரன்

சென்னை

# “வாருங்கள் எங்கள் மாநிலத்தில் வாய்ப்புகள் கொட்டிக்கிடக்கு”

## டுபாயில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முதலீட்டாளர்களுக்கு அழைப்பு

அரசுமுறை பயணமாக டுபாய் சென்றுள்ள தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக, ஐக்கிய அரபு அமீரகத்தின் அமைச்சர்களைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார். இதன்பயனாக நேற்று (27) ஐக்கிய அமீரகம்-தமிழ்நாடு இடையே 1,600 கோடி ரூபாய்க்கான முதலீடு ஒப்பந்தமானது. குறிப்பாக நோபல் குழுமம் சார்பில் 1,000 கோடி ரூபாய் முதலீட்டில் இரும்பு தொழிற்சாலை அமைக்க ஒப்பந்தம் செய்துள்ளது.



டுபாயில் செய்தியாளர்களைச் சந்தித்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாடு ஏழரை கோடி மக்கள் தொகை கொண்ட மாநிலம். 2030 ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டொலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக மாற்றிட வேண்டும் என்ற தொலைநோக்கத்துடன் நாங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த இலக்கை அடைவதற்காகத் தமிழ்நாட்டின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், பணியாளர்களுடைய திறனை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். நீங்கள் எங்கள் மாநிலத்தில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. வாருங்கள் எங்கள் மாநிலத்தில் வாய்ப்புகள் கொட்டிக்கிடக்கு. எல்லோரும் பயனடைவோம்” என்று அழைப்பு விடுத்தார்.



இதேவேளை, டுபாயில் நடைபெற்று வரும் உலக கண்காட்சியில், இந்திய அரங்கில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரங்கை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெள்ளிக்கிழமை (25) திறந்து வைத்தார்.

அதைத் தொடர்ந்து, இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானின் ஸ்டூடியோவுக்கு சென்று பார்வையிட்டார். இது குறித்து, முதலமைச்சர் தனது அதிகாரப்பூர்வ ட்விட்டர் பக்கத்தில், “துபாய் எக்ஸ்போ 2022 பார்வையிடச் சென்ற என்னை, நண்பர் இசைப் புயல்'ஏ.ஆர்.ரஹ்மான் தன்னுடைய ஸ்டூடியோவுக்கு அழைத்து, தான் தயாரித்துள்ள ‘மூப்பில்லா தமிழே தாயே' ஆல்பத்தை காண்பித்தார். தமிழுக்கும் இசைக்கும் உலகில் எல்லை இல்லை’ என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் ஸ்டாலின், ஐந்து நாள் பயணமாக வியாழக்கிழமை (24) டுபாய் புறப்பட்டவர், செவ்வாய்க்கிழமை (29) அதிகாலையில் சென்னை வரவுள்ளார்.

போச்சம்பள்ளி

## தம்பியின் விரலைக் கடித்து துப்பிய அண்ணன்

நில தகராறில் ஆத்திரம்அடைந்த அண்ணன், தம்பியின் கை விரலை கடித்து துப்பினார். கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூரைச் சேர்ந்தவர் சண்முகம், வயது 45; இவரது அண்ணன் கேசவன் வயது 47; இருவருக்கும் நேற்று முன்தினம் (26) மாலை, நிலம் சம்மந்தமாக தங்களது தாயுடன் பேசிக் கொண்டிருந்தபோது, சண்முகம், கேசவன் இருவருக்கும் தகராறு ஏற்பட்டது. ஆத்திரத்தில், கேசவன், தன் தம்பியின் இடது கை ஆட்காட்டி விரலைக் கடித்துத் துப்பினார். சண்முகத்தின் புகார்படி பொலிஸார், கேசவனை கைது செய்தனர்.

திருச்சி

## மாணவனைத் திருமணம் செய்த ஆசிரியை கைது

திருச்சி, துறையூர் பகுதியில் உள்ள தனியார் பாடசாலையில் பிளஸ் 1 படித்து வந்த மாணவரை, மார்ச் ஐந்தாம் திகதி முதல் காணவில்லை. இதுகுறித்து துறையூர் பொலிஸார் விசாரித்தனர். இதில், அந்தப் பாடசாலையில் பணியாற்றிய 26 வயது ஆசிரியை அதே நாளில் காணாமல் போனதும், மாணவரும் அவரும் அடிக்கடி அலைபேசியில் பேசியுள்ளதும் தெரியவந்தது. இதையடுத்து, ஆசிரியையின் அலைபேசியை பொலிஸார் கண்காணித்தபோது, இருவரும் திருச்சி எடமலைப்பட்டிப்புதூரில் இருப்பது தெரியவந்தது. பொலிஸார், இருவரையும் பிடித்து விசாரித்தபோது, அவர்கள் தஞ்சாவூரில் உள்ள ஒரு கோவிலில் தாலிகட்டி திருமணம் செய்து கொண்டது தெரியவந்தது.

இதையடுத்து, 17 வயது மாணவரைக் கடத்தி திருமணம் செய்ததாக ஆசிரியை போக்ஸோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். மாணவர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இராமேஸ்வரம்

## இராமேஸ்வரம் மீனவர்கள் வேலைநிறுத்தம்

கச்சத்தீவு அருகே மீன் பிடிக்கும் தமிழக மீனவர்களையும், அவர்களது விசைப் படகுகளையும் இலங்கை கடற்படை வீரர்கள் சிறைபிடிக்கும் சம்பவங்கள் தொடர்கதையாக நடந்து வருகின்றன.

இந்தநிலையில், கடந்த புதன்கிழமை (23) இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்க சென்ற 16 மீனவர்கள், அவர்களது இரண்டு விசைப்படகுகளை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்தனர். சிறைபிடிக்கப்பட்ட இராமேஸ்வரம், பாம்பன் பகுதியை சேர்ந்த 16 மீனவர்களும் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

அவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க மத்திய-மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியும், தமிழக மீனவர்களை கைது செய்யும் இலங்கை கடற்படையை கண்டித்தும் இராமேஸ்வரம், பாம்பன் பகுதி மீனவர்கள் நேற்று முன்தினம் (26) முதல் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தை தொடங்கினர்.

மேலும், இ ராமேஸ்வரம் பஸ் நிலையம் எதிரே அனைத்து விசைப்படகு மீனவர்கள் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது. அதில் விசைப்படகு மீனவர்கள் சங்க பிரதிநிதிகள், மீனவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்தநிலையில்,மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. 600க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கரைகளில் நிறுத்தப்பட்டுள்ளன.

சம்பல்பூர்

## சிறுமியின் தலையுடன் ஊரைச் சுற்றியவர் கைது

ஒடிசாவில் எட்டு வயது சிறுமியின் கழுத்தை அறுத்து கொலை செய்த பின்னர், அந்தச் சிறுமியின் தலையுடன் ஊரைச் சுற்றி வந்த நபரை, பொலிஸார் கைது செய்தனர்.

சம்பல்பூர் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த, எட்டு வயது சிறுமி, காலைக் கடன் கழிப்பதற்காக, நேற்று முன்தினம் (27) வயல் பகுதிக்கு சென்றுள்ளார். அதே கிராமத்தைச் சேர்ந்த 30 வயது நபர், கோடரியுடன் அவரை பின்தொடர்ந்துள்ளார்.

பின்னர் சிறுமியின் கழுத்தை கோடரியால் வெட்டி, தலையை கையில் பிடித்துக் கொண்டு கிராமம் முழுதும் சுற்றி வந்துள்ளார்.

பின்னர், தண்ணீர் குழாயில் சிறுமியின் தலையையும் கோடரியில் இருந்த இரத்தக்கறையையும் கழுவி உள்ளார். இதை தட்டிக்கேட்ட மனைவியையும் மிரட்டி உள்ளார். பின்னர், அங்கேயே தரையில் படுத்துத் தூங்கினார். தகவல் அறிந்து வந்த பொலிஸார், குறித்த நபரை கைது செய்ததுடன், சிறுமியின் தலையையும் முண்டத்தையும் கைப்பற்றினர்.

சிறுமியின் குடும்பத்துக்கும் கொலை செய்தவருக்கும் தகராறு ஏதும் இல்லை எனவும் மது அருந்தும் பழக்கமுள்ள அவர், மனநிலை பாதிக்கப்பட்டவரும் இல்லை எனவும், எனவே, கொலைக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணையை தீவிரப்படுத்தி உள்ளனர்.

சென்னை:

## மாணவிக்கு தாலி கட்டி பாலியல் உறவு: 14 ஆண்டுகள் சிறை தண்டனை

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர் விஜயகுமார்; திருமணமாகி, இரண்டு குழந்தைகள் உள்ளனர். இவரது சகோதரி, ஈரோட்டில் வசித்து வருகிறார். சகோதரி வீட்டின் அருகில் வசிக்கும் சிறுமி, 10ஆம் வகுப்பு படித்து வந்தார். அடிக்கடி சகோதரி வீட்டுக்கு வரும் விஜயகுமார், மாணவியிடம் காதல் வயப்பட்டார்.

பள்ளியை விட்டு வெளியே வந்த மாணவியை, வாகனத்தில் நண்பர்கள் வீட்டுக்கு அழைத்து சென்று தாலி கட்டி, வீடு எடுத்து குடும்பம் நடத்தினார். மாணவியின் பாட்டி அளித்த புகாரின்படி, விஜயகுமார் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம், 2016 ஒகஸ்ட்டில் நடந்தது. வழக்கை விசாரித்த ஈரோடு மகளிர் நீதிமன்றம், விஜயகுமார் உள்ளிட்ட மூவருக்கும், ஆயுள் தண்டனை விதித்து, 2017 நவம்பரில் தீர்ப்பு அளித்தது. தண்டனையை எதிர்த்து, மூவரும் மேல்முறையீடு செய்தனர். மனுக்களை விசாரித்த நீதிபதிகள் பின்வருமாறு உத்தரவிட்டனர்: ஒருவரை ஒருவர் காதலித்ததாகவும், விருப்பத்துடனேயே விஜயகுமாருடன் சிறுமி சென்றதாகவும், அதனால் தண்டனையை குறைக்கும்படியும், மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் கோரினர். மேலும், அந்த சிறுமி, தற்போது வேறு ஒருவரை திருமணம் செய்து கொண்டதாகவும் தெரிவித்தனர். எனவே, விஜயகுமாருக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை, 14 ஆண்டு கடுங்காவல் தண்டனையாக குறைக்கிறோம் என்றனர்.

பெண்களுக்கு வலுவூட்டும்

# ‘வெல்பவள்’ திட்டம் அறிமுகம்

சமூகத்தைச் சேர்ந்த பெண்களுக்கு வலுவூட்டி மேம்படுத்தும் செயற்றிட்டமான ‘தினன்னீ’ (வெல்பவள்) திட்டத்தை எலிபன்ட் ஹவுஸ் ஐஸ் கிறீம் அறிமுகம் செய்துள்ளது.



பெண்கள் செயலகம் மற்றும் இதர அரச சார்பற்ற முகவரமைப்புகளின் ஆதரவுடன், நாடு முழுவதையும் சேர்ந்த உதவிகள் தேவைப்படும் பெண்களை சென்றடைந்து, ஐஸ் கிறீம் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் அவர்களை ஈடுபடுத்தி ஆதரவளிப்பதற்கு முன்வந்துள்ளது. அதன் பிரகாரம் ஐஸ் கிறீம் விற்பனை, விநியோகம் அல்லது ஐஸ் கிறீம் உற்பத்திக்கு அல்லது விற்பனைக்கு அவசியமான மூலப்பொருட்களை கொள்முதல் செய்வதில் பங்களிப்பு வழங்குவதில் பெண்களை ஈடுபடுத்த முன்வந்துள்ளது. நிறுவனத்தின் விற்பனை செயலணி மற்றும் நடமாடும் விற்பனைப் பகுதிகள், ஐஸ் கிறீம் விற்பனை நிலையங்கள் மற்றும் விநியோக வலையமைப்புகளில் பெண் ஊழியர்களை உள்வாங்கும் வகையில் விற்பனைச் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்படவுள்ளன.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி, ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள், பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சினால் தேசிய மட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ‘எய’ (அவள்) நிகழ்ச்சிக்கு எலிபன்ட் ஹவுஸ் ஐஸ் கிறீம் அனுசரணை வழங்கியிருந்தது. இந்நிகழ்வு மார்ச் மாதம் 8, 9 ஆம் திகதிகளில் இடம்பெற்றது. இந்தத் தேசிய நிகழ்வில் பிரதமர் பங்கேற்றிருந்ததுடன், 1,700க்கும் அதிகமான பெண் தொழில்முயற்சியாளர்களை கவர்ந்திருந்தது.

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் உப தலைவரும், உறைய வைக்கப்பட்ட இனிப்புப் பண்டங்கள் பிரிவின் தலைமை அதிகாரியுமான சதிஷ் ரத்நாயக்க கருத்துத் தெரிவிக்கையில், “தமது நேரத்தையும் உடல் சிரத்தையும் குடும்பத்துக்காகவும், சமூகத்துக்காகவும் அர்ப்பணித்து, வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் பெண்கள் முன்னோடிகளாக திகழ்கின்றனர் என்பதில் எலிபன்ட் ஹவுஸ் நம்பிக்கை கொண்டுள்ளது. எமது பெறுமதி சங்கிலிகளில் பன்முகத்தன்மை, சமத்துவம், உள்ளடக்கம் ஆகியவற்றை ஊக்குவிக்கும் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் One JKH நிகழ்ச்சிக்கு அமைவாக இது அமைந்துள்ளது. பெண்களுக்கு வலுவூட்டல் என்பது புதிய வழிமுறைகளை பின்பற்றவுள்ளதுடன், அதனை உயர்ந்த நிலைக்கு செல்வது எமது கடமையாகும். பெண்களின் வெற்றியீட்டும் குணவியல்பை மேலும் உணர்த்தும் வகையில் இந்தத் திட்டத்துக்கு ‘தினன்னீ’ என பெயரிடப்பட்டுள்ளது” என்றார்.

> **“ சமூகத்துக்கு பெண்களின் பொருளாதார ரீதியான பங்களிப்பு, சுய பெறுமதி உணர்வை ஊக்குவிப்பது, தமது சொந்தத் தெரிவுகளை தீர்மானிக்கும் திறன், தமக்காகவும் ஏனையவர்களுக்காகவும் சமூக மாற்றத்தை ஏற்படுத்த தூண்டும் அவர்களின் உரிமை ஆகியவற்றை பெண்கள் மத்தியில் ஊக்குவிக்கும் நோக்கில் ‘வெல்பவள்’ திட்டம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. குடும்பத்தில் மகள், மனைவி, தாய் எனப் பெண் ஒருவர் வகிக்கும் பங்களிப்பு தொடர்பில் இந்தத் திட்டம் கவனம் செலுத்துகின்றது**

‘எய’ மகளிர் தின நிகழ்வில், எலிபன்ட் ஹவுஸ் ஐஸ்கிறீம் வகைகளுக்கான தனது முதலாவது பெண் பிரதேச விற்பனை முகாமையாளரான மலிந்திகா பெர்னாண்டோ உரையாற்றியிருந்தார். எலிபன்ட் ஹவுஸில் தமது பயணம் மற்றும் ‘தினன்னீ’ திட்டத்தினூடாக எதிர்பார்த்த ஆதரவு பற்றி குறிப்பிட்டிருந்தார். இந்நிகழ்வின் போது, காட்சிகூடத்துக்கு விஜயம் செய்து ‘தினன்னீ’ திட்டத்தில் பதிவு செய்து கொள்வதற்கு பெண்கள் ஊக்குவிக்கப்பட்டிருந்தனர்.

சமூகத்துக்கு பெண்களின் பொருளாதார ரீதியான பங்களிப்பு, தமது சுய பெறுமதி உணர்வை ஊக்குவிப்பது, தமது சொந்த தெரிவுகளை தீர்மானிக்கும் திறன் மற்றும் தமக்காகவும் ஏனையவர்களுக்காகவும் சமூக மாற்றத்தை ஏற்படுத்த தூண்டும் அவர்களின் உரிமை ஆகியவற்றை பெண்கள் மத்தியில் ஊக்குவிக்கும் நோக்கில் ‘தினன்னீ’ திட்டம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. குடும்பத்தில் மகளாக, மனைவியாக தாயாக பெண் ஒருவர் ஆற்றும் பங்களிப்பு தொடர்பில் இந்தத் திட்டம் கவனம் செலுத்தும் என்பதுடன், தமது திறன்களை விரிவாக்கம் செய்து கொண்டு புதிய நிலைகளில் தம்மை மேம்படுத்திக் கொள்வதற்கு ஆதரவளிக்கும்.

Expo 2020 டுபாய் நிகழ்வில் ஜொலித்த

# இலங்கையின் மாணிக்கக்கல்

டுபாயில் இடம்பெறும் EXPO 2020 நிகழ்வில் நிறுவப்பட்டுள்ள ஸ்ரீ லங்கன் பெவிலியனினால், 100 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதி வாய்ந்த மாணிக்கக்கற்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. ‘Day of Sapphires’ எனத் தலைப்பிடப்பட்டிருந்த இந்த நிகழ்வில் சகல வயதையும் சேர்ந்த விருந்தினர்கள் பங்கேற்றதுடன், அவர்களுக்கு இலங்கையின் மாணிக்கக்கற்கள், ஆபரணங்கள் தயாரிப்பு முறைகள் பற்றிய விளக்கங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக லண்டன் மற்றும் ஜெனீவாவில் Sotheby’s மற்றும் Christie’s இல் அனுபவங்களைக் கொண்டுள்ள புகழ்பெற்ற ஆபரண நிபுணரான ஹெலென் மோல்ஸ்வேர்த் பங்கேற்றிருந்தார். விருந்தினர்களுக்கு விளக்கமளிக்கையில், இலங்கையின் மாணிக்கக்கற்கள், வர்த்தகம், அகழ்வு முறைகள், வெட்டல், தீட்டல், ஒட்டுமொத்த ஆபரணங்கள் தயாரிப்பு செயன்முறை பற்றி விவரித்திருந்தார்.




மாணிக்கக்கல், ஆபரணங்கள் சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வினூடாக, சர்வதேச விற்பனைகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன், ‘Ceylon Sapphire’ (நீல மாணிக்கம்), மாணிக்கக்கற்கள், ஆபரணங்கள் பிரிவில் இலங்கை கொண்டுள்ள உயர்ந்த தரம் வாய்ந்த மாணிக்கக்கற்கள் (மென் சிவப்பு, மஞ்சள், தங்கம், நட்சத்திர மாணிக்கக்கற்கள்) போன்றவற்றைப் பெறுவதற்கான முக்கியமான மூலமாக அமைந்திருப்பது என்பதுடன் உலகின் சிறந்த மாணிக்கக்கல் வெட்டல், தயாரித்தல் பகுதிகளில் ஒன்றாக அமைந்திருத்தல் போன்றவற்றை மேலும் மேம்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.

சர்வதேச மட்டத்தில் இலங்கை கொண்டுள்ள உயர்ந்த ஸ்தானத்தை மேலும் தக்க வைத்துக் கொள்ளும் வகையில், உயர்மட்ட சொகுசு சந்தையில் நிலவும் கேள்வியை நிவர்த்தி செய்யக்கூடிய உயர் திறன் படைத்த வடிவமைப்பாளர்கள் மற்றும் சர்வதேச தரம் வாய்ந்த மாணிக்கக்கல் சிற்பிகள் தம்மை தயார்நிலையில் வைத்துள்ளனர்.

உலகின் சிறந்த ஐந்து மாணிக்கக்கற்கள் வளத்தைக் கொண்டுள்ள நாடுகளில் ஒன்று இலங்கை என அறியப்படும் நிலையில், நாட்டினுள் அதிகளவு அந்நியச் செலாவணியை பெற்றுக் கொடுக்கக்கூடிய தொழிற்றுறையாகத் திகழ்வதற்கான உள்ளம்சங்களைக் கொண்டுள்ளது.

எவ்வாறாயினும் முறையான தந்திரோபாய ரீதியான வளர்ச்சித் திட்டம் இன்மை, தொழிற்றுறையின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கக்கூடிய கொள்கை காணப்படாமை போன்றன, டுபாய், தாய்லாந்து, ஹொங்கொங் போன்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் அதன் முழுமையான திறனை எய்துவதற்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளன.

நாடு தொழிற்றுறையுடன் கொண்டுள்ள சிறந்த வாய்ப்புகளைக் கவனத்தில் கொண்டு, கொள்கை வடிவமைப்பாளர்களால் 10 ஆண்டு காலப்பகுதிக்கான தந்திரோபாய அபிவிருத்தித் திட்டமொன்று வகுக்கப்பட்டு நிறைவேற்றப்படுவதற்கு, இலங்கையின் நீல மாணிக்கக்கல் வர்த்தக நாமத்தை முன்னே கொண்டு செல்வதற்கு மாணிக்கக்கல், ஆபரணங்கள் சம்மேளனம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் அங்கமாக, Expo 2020 டுபாய் போன்ற வெற்றிகரமாக அமைந்திருக்கும் சர்வதேச நிகழ்வுகளில் தொடர்ந்தும் பங்கேற்பதற்கு சம்மேளனம் திட்டமிட்டுள்ளது.

மேலும், முன்னோர்கள் பேணி வந்த கீர்த்தி நாமத்தை தக்க வைத்து, ஆபரணங்கள் அலங்காரத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தும் இளம் வடிவமைப்பாளர்கள் தொடர்ந்தும் அடையாளம் காணப்பட்டு, அவர்களை நாட்டினுள் பேணுவதற்கு அவசியமான ஊக்குவிப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

போலந்து

# “பதவியிலிருக்க முடியாது”

## புட்டின் குறித்து பைடன் கருத்து

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை கசாப்புக் கடைக்காரரொருவர் என அழைத்த ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், அவர் பதவியில் இருக்க முடியாது எனக் கூறியுள்ளார்.

போலந்தின் உக்ரேனிய அகதிகளைச் சந்தித்த பின்னரே குறித்த கருத்தை ஜனாதிபதி பைடன் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில், மேற்கு உக்ரேனிய நகரமான லிவ் உள்ளடங்கலாக உக்ரேன் முழுவதும் தாக்குதல்களை ரஷ்யப் படைகள் அதிகரித்துள்ளன.



இதேவேளை, ஜனாதிபதி பைடனின் கருத்தானது ரஷ்யாவில் அரசாங்க மாற்றத்துக்கான அழைப்பொன்று அல்ல என வெள்ளை மாளிகை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பைடன் உரையாற்றுவதற்கு சற்று முன்பதாக, போலந்து எல்லையிலிருந்து 60 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள லிவ்வின் புறநகர்களை நான்கு ஏவுகணைகள் தாக்கியதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனா

### வீழ்ந்த விமானத்தின்

# 2ஆவது கறுப்பு பெட்டி மீட்பு

தென் சீனாவின் மலைப்பாங்கான பகுதியில் வீழ்ந்த சைனா ஈஸ்டர்ன் எயார்லைன்ஸின் 737-800 ஜெட்டின் சிதிலத்திலிருந்து இரண்டாவது கறுப்புப் பெட்டியான விமானத் தரவுப் பதிவை மீட்பு அணிகள் நேற்றுக் கண்டுபிடித்துள்ளன.

இந்நிலையில், விமானத்திலிருந்த அனைவரும் உயிரிழந்ததாக நேற்று முன்தினமிரவு நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அதிகாரிகள் அறிவித்திருந்தனர்.



## நிலநடுக்கம்

ஈக்குவடோரின் கரையோரப் பகுதிக்கருகே நேற்று முன்தினமிரவு தாக்கிய 5.8 றிச்டர் அளவிலான நிலநடுக்கத்தால், கட்டடங்கள் சேதமடைந்ததுடன், நெடுஞ்சாலைகளில் மின் கம்பங்கள் வீழ்ந்துள்ளன.

பிரித்தானியா

### பொதுநலவாயத் தலைவர் விவகாரம்

# வில்லியம் அதிரடி

பொதுநலவாயத் தலைவராக மகாராணி, தந்தையைப் தான் பிரதியிடாமல் விடலாம் என்பதை பிரித்தானிய இளவரசர் வில்லியம் ஏற்றுக் கொண்டுள்ளார்.

மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூற விரும்பவில்லை என வில்லியம் குறிப்பிட்டுள்ளார்.

மகாராணியை மரியாதை ரீதியாக வில்லியம் பிரதியிட வேண்டுமென கடந்த 2018ஆம் ஆண்டு பொதுநலவாயத் தலைவர்கள் தீர்மானித்திருந்தனர்.




இதேவேளை, குறித்த பதவியானது பொதுநலவாயத் தலைவர்களிடத்தே சுழற்சி முறையில் வழங்கப்பட வேண்டும் என்றவாறான கருத்துகளும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

யேமன்

### சவுதி மீதான தாக்குதல்கள் இடைநிறுத்தம்

# ஹூதிகள் குழு அறிவிப்பு



சவுதி அரேபியா மீது மூன்று நாள்களுக்கு ஏவுகணை, ட்ரோன் தாக்குதல்களை இடைநிறுத்துவதாக யேமனின் ஹூதி குழு நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

சமாதான முன்னெடுப்பொன்றிலேயே இதை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்த ஹூதிகள், யேமனில் போரிடும் சவுதி தலைமையிலான கூட்டணியானது வான் தாக்குதல்களை நிறுத்தி, துறைமுகக் கட்டுப்பாடுகளை நீக்கினால் இந்தச் சமாதான முன்னெடுப்பானது தொடரக்கூடியதாக இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, வாயு தயாரிக்கும் மரிப் பிராந்தியம் உள்ளடங்கலாக யேமனில் தரைவழி வலிந்த தாக்குதல்களை மூன்று நாள்களுக்கு இடைநிறுத்துவதாகவும் ஹூதிகள் அறிவித்துள்ளதாக அவர்களின் அரசியல் அலுவலகத்தின் தலைவர் மஹ்டி அல்-மஷாட், தொலைக்காட்சியில் ஒளிபரப்பான உரையில் கூறியுள்ளார்.

சவுதியின் ஜெடாவிலுள்ள எண்ணெய் வசதியொன்று உள்ளடங்கலாக சவுதி மீது பரவலான தாக்குதல்களை கடந்த வெள்ளிக்கிழமை ஹூதிகள் நடத்தியதுடன், ஹூதிகளால் கட்டுப்படுத்தப்படும் ஹொடெய்டா, சலீஃப் துறைமுகங்கள் மீது வான் தாக்குதல்களை சவுதி தலைமையிலான கூட்டணி நேற்று முன்தினம் நடத்தியிருந்தது.







### மர்ஹூம் கே.ஏ. பாயிஸ் ஞாபகார்த்த கிண்ணத் தொடர்:

# லிவர்பூல் சம்பியன்

■ எம்.யூ.எம். சனூன்

புத்தளம் நகரில் தொடராக நடாத்தப்பட்டு வந்த கே.ஏ. பாயிஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான தொடரின் இறுதிப் போட்டியில் புத்தளம் லிவர்பூல் அணி வீரர் எம்.எஸ். எம்.நஸ்ரி புகுத்திய அடுத்தடுத்து ஹட்-ட்ரிக் கோல்களின் மூலம் அவ் அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக்கியது.

புத்தளம் நகர சபையின் ஏற்பாட்டில் புத்தளம் கால்பந்தாட்ட லீக்கின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற இத்தொடரின் பரபரப்பான இறுதிப் போட்டி, புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்றது.

முக்கியமான போட்டி இதுவென்பதால் புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் அதிகமான ரசிகர்கள் ஒன்று கூடியிருந்தனர்.

இந்த இறுதிப்போட்டியில் புத்தளம் லிவர்பூல் அணியும் நாகவில்லு எருக்கலம்பிட்டி எப்.சி அணியும் பலப்பரீட்சை நடாத்தின.

முதல் பாதியில் இரு அணிகளுமே எவ்வித கோல்களையும் பெற்றுக்கொள்ளவில்லை.

இரண்டாவது பாதியில் ஆட்டம் விறுவிறுப்பாக மாறியது.

இந்நிலையில் லிவர்பூல் அணியில் ஜனரஞ்சக ஆட்டத்தை வெளிப்படுத்தும் வீரரான, சப்ரகமுவ பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன் அஷ்ஷெய்க் எம்.எஸ். எம். நஸ்ரி 55, 62, 65 வது நிமிடங்களில் தொடரான ஹட்-ட்ரிக் கோல்களைச் செலுத்தி தனது அணியை முன்னிலைப்படுத்தினார்.

எனினும் போட்டி நிறைவு பெறும் தறுவாயில் 88ஆவது நிமிடத்தில் நாகவில்லு எருக்கலம்பிட்டி எப்.சி.அணி வீரர் எம். அப்கான் தனது அணிக்காக கோலைச் செலுத்தினார்.

கால்ப்பந்தாட்ட ரசிகர்களால் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இறுதிப் போட்டியில் 3- 1 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் அணி வெற்றி பெற்று சம்பியனாகியது.

இறுதிப் போட்டியின் நாயகனாக எம்.எஸ்.எம். நஸ்ரியும், சிறந்த கோல் காப்பாளராக அதேயணியின் ஏ.ஜே.எம். பரோஜும் தெரிவாகினர்.

இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக ஏ.ஏ. கியாஸ், ஏ.ஓ. அஸாம், எம். சரீக், எம். எஸ்.எம். இனாஸ் ஆகியோர் கடமையாற்றினர்.

சம்பியனான லிவர்பூக்கு 30,000 ரூபாய், நாகவில்லு எருக்கலம்பிட்டி அணிக்கு 20,000 ரூபாய் பரிசுத் தொகையும் வழங்கப்பட்டதோடு, சகல வீரர்களுக்கும் பதக்கங்களும் அணிவிக்கப்பட்டன.

இதன்போது கடந்த 2019ஆம் ஆண்டு புத்தளம் கால்பந்தாட்ட சம்மேளனத்தால் நடாத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்ற விம்பிள்டன், யாழ். முஸ்லிம் யுனைடெட், லிவர்பூல் மற்றும் நியூ ஸ்டார்ஸ் ஆகிய நான்கு அணிகளுக்கும் இதன்போது பெறுமதியான பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

### கண்டிப் பாடசாலைகளுக்கு இடையில்

# இருபதுக்கு-20 தொடர்

■ மொஹொமட் ஆஸிக்

இரண்டாவது ஆண்டாகவும் கண்டிப் பாடசாலைகளுக்கிடையிலான இருபதுக்கு – 20 கிரிக்கெட் போட்டி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் அடுத்த மாதம் 6, 7, 8ஆம் திகதிகளில் கண்டி அஸ்கிரிய சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளன.

மேற்படி தொடரில் பங்கு கொள்ளும் எட்டு அணிகளுக்கும் தலா 50,000 ரூபாய் ரொக்கப் பணம் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படுவதுடன், சம்பியனாகும் அணிக்கும், இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கும் கேடயங்கள் பரிசாக வழங்கப்படவுள்ளன.

### ஐ.பி.எல்:

# சென்னையை வீழ்த்திய கொல்கத்தா

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) நடப்பாண்டு பருவகாலமானது நேற்று முன்தினம் ஆரம்பித்த நிலையில், மும்பையில் நேற்றூ முன்தினம் நடைபெற்ற ஆரம்பப் போட்டியில் நடப்புச் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸை கொல்கத்தா நைட் றைடர்ஸ் வீழ்த்தியது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தாவின் அணித்தலைவர் ஷ்ரேயாஸ் ஐயர், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை, ஆரம்பத்திலேயே ருத்துராஜ் கைகவாட், டெவோன் கொன்வேயை உமேஷ் யாதவ்விடம் பறிகொடுத்தது. பின்னர் வந்து றொபின் உத்தப்பா 28 (21) ஓட்டங்களைப் பெற்றபோதும், அவர், அம்பாதி



ராயுடு, ஷிவம் டுபேயை அடுத்தடுத்து இழந்து சிக்கலான நிலையில் சென்னை இருந்தது.

இந்நிலையில், மகேந்திர சிங் டோணியின் ஆட்டமிழக்காத 50 (38), அணித்தலைவர் இரவீந்திர ஜடேஜாவின் ஆட்டமிழக்காத 26 (28) ஓட்டங்களுடன் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 131 ஓட்டங்களையே பெற்றது. பந்துவீச்சில், உமேஷ் யாதவ் 4-0-20-2, வருண் சக்கரவர்த்தி 4-0-23-1, சுனில் நரைன் 4-0-15-0 என்ற சிறப்பான பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 132 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா, அஜின்கியா ரஹானேயின் 44 (34) ஓட்டங்கள் மூலம் வெற்றியிலக்கை நோக்கி நகர்ந்தபோதும், டுவைன் பிராவோவிடம் குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளை பறிகொடுத்தது. எவ்வாறாயினும், 18.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பிராவோ 4-0-20-3 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக உமேஷ் யாதவ் தெரிவானார்.

இந்நிலையில், மும்பையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் றைசிங் பூனே சுப்பர்ஜையன்ட்ஸை குஜராத் லயன்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

### இலங்கை பார்சிலோனா கால்பந்து அகடமியுடன்

# நெஸ்லே மைலோ





இலங்கையிலுள்ள பார்சிலோனா கால்பந்து அகடமியின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதற்காக அதனுடன் நெஸ்லே மைலோ கைகோர்த்திருந்தது.

இந்த விழாவையொட்டி குதிரைப்பந்தயத் திடல் மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற பல்வேறு வயதுப் பிரிவுகளிடையேயான போட்டியில் 500க்கும் மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் திங்கட்கிழமை, 28 மார்ச் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.